பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 05 சனிக்கிழமை 21.08.2021 கதிர் 289

**இனி இது ரகசியம் அல்ல!**

தற்போது நடைமுறைக்கு வந்துள்ள பொது முடக்கம் பத்து நாள்களில் முடிவுக்கு வரும் ஒன்றாகத் தென்படவில்லை.

ஜனாதிபதியின் நேற்று இரவு உரையை ஆழமாக அவதானிப்பவர்கள் இதனை கவனிக்க முடியும்.

பொது முடக்கத்தை பக்கம்02

# பல தரப்பினரின் அழுத்தங்களால் பத்து நாள்களுக்கு நாடு முடக்கம்!

## பிடிவாதத்திலிருந்து இறங்கி வந்தார் கோட்டாபய

இலங்கையில் கொரோனா வைரஸ் கோரத்தாண்டவமாடும் நிலையில் நாட்டை ஒருபோதும் முடக்கவேமாட்டேன் என்று தெரிவித்து வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பல தரப்பினரின் அழுத்தங்களையடுத்து நாட்டை 10 நாள்களுக்கு முடக்க அனுமதி வழங்கியுள்ளார்.

அதற்கமைய நாடு முழுவதும் நேற்றிரவு 10 மணி முதல் பத்து நாள்களுக்குத் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் இந்த ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் சுகாதாரம், ஆடைத்தொழிற்சாலை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை நடத்திச் செல்வதற்கு எந்தத் தடையும் ☞2

# நேற்று தொற்று 3,835

இலங்கையில் நேற்று 3 ஆயிரத்து 835 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் ☞2

# நீண்ட முடக்கம் வேண்டுமென்றால் அர்ப்பணிப்புக்குத் தயாராகுங்கள்!

## நாட்டு மக்களுக்கான விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



**கொழும்பு, ஓகஸ்ட் 21**

**இனிவரும் நாள்களில், இந்நாட்டை நீண்ட காலத்துக்கு மூடி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், நாட்டிலுள்ள அனைவரும், மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்குத் தயாராக வேண்டும்.**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.** ☞2

# ஒரே நாளில் 195 பேரை சாகடித்த கொரோனா!

இலங்கையில் மேலும் 195 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் அறிவித்துள்ளது.

இதுவே நாட்டில் இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா காவுகளின் எண்ணிக்கையாகும்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 985 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 195 பேரில் 98 ஆண்களும், 97 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் ஒருவர் வயதுக்குட்பட்டவர். ☞2

# ஊரடங்கு காலத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

## வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும் என்கிறார் இராணுவத் தளபதி



நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள காலப்பகுதியில் இதுவரையில் கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்க ஜனாதிபதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ☞10

# குற்றவியல் மன்றுக்குப் பாரப்படுத்தும் தீர்மானத்துக்கு யாழ். மாநகரசபையில் ஈ.பி.டி.பியும் ஆதரவு அளித்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.21

இலங்கையின் இனப்படுகொலை தொடர்பான விடயத்தை எதிர்வரும் ஐ.நா. கூட்டத்தொடரில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை வேண்டும் என்ற கோரும் தீர்மானம் ஒன்று யாழ்.மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்றினதும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

2021.08.20 ஆம் திகதிய (நேற்றிய) மாதாந்த கூட்டத்தின் தொடர் இன்றைய தினம் பிற்பகல் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றபோது சபை நிறைவின் போது விசேட தீர்மானமாக இது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

செம்ரெம்பர் ☞2

# யாழில் மேலும் இருவர் கொரோனாவால் சாவு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

யாழ்ப்பாணத்தில் நேற்று இரண்டு பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஒருவரும், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 194 ஆக உயர்வடைந்துள்ளது.

# வவுனியாவில் மயங்கி விழுந்த பெண் மரணம்

## அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா, குருமன்காடு பகுதியில் திடீரென மயங்கி விழுந்த இளம் குடும்பப் பெண் மரணமடைந்துள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு

# தீர்மானத்தில் ஈ.பி.டி.பியினர் தாம் பங்காளர்கள் அல்லராம்!

யாழ்ப்பாணம், ஓக.21

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரின் போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று கோரும் விதத்தில் யாழ் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் விடயத்துக்கும் தங்கள் கட்சிக்கும் தொடர்பேதுமில்லை எனத் தெரிவித்திருக்கின்றார் ஈ.பி.டி.பியின் மாநகர சபை உறுப்பினர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா.

நேற்றைய தினம் ☞2

# இராமநாதன் நுண்கலைப் பிரிவை தனிப் பீடமாக தரமுயர்த்த அனுமதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.21

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் கீழ் இயங்கிவந்த நுண்கலைப் பிரிவை தனிப் பீடமாகத் தரமுயர்த்த (இராமநாதன் நுண்கலைப் பீடமாகத் தரம் உயர்த்து) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.

மானியங்கள் ஆணைக்குழுவின் நேற்றைய கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டது . இதற்கமைய இதற்கான எழுத்து மூலமான அனுமதி விரைவில் கிட்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவிப்பதில் தாம் ஏன் பின்னடித்தார், கால தாமதப்படுத்தினார் என்பதற்கான காரணங்களை கடைசியில் அவர் விவரித்துள்ளார். கடைசியில் – முத்தாய்ப்பாக – அவர் ஒரு விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

*“இனிவரும் நாள்களில் இந்த நாட்டை நீண்ட காலத்துக்கு மூடி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாயின் நாட்டில் உள்ள அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு தயாராக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்”* – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது தற்போதைய பத்து நாள் முடக்க அறிவிப்பு அடுத்த ஒரு மாதத்துக்கு மேல் – சில சமயங்களில் நாற்பத்தியைந்து நாள்கள் வரை கூட – நீடிக்கலாம் என்பதையே சுட்டுகின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிடுகின்றமை போல இனி வரப்போவது தீர்மானமிக்க ஒரு நிலைமைதான்.

ஒன்றரை மாதங்கள் வரையான முடக்கத்துக்கு இப்போதே தயாராகியிருப்பதுதான் நல்லது.

★ ★ ★

யாழ். மாநகர மேயர் வீ.மணிவண்ணனுக்கு இது கூடாத – போறாத – காலம் போலும்.

'யாழ்.நகரில் வரவேற்பு வளைவு அமைத்தல்' தொடர்பான விடயத்தில், நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் அவர் வாங்கிக் கட்ட வேண்டியிருந்தது.

நேற்றைய கூட்டத்தில் முறை ஈ.பி.டி.பியினுடையது போலும். அவரின் நடவடிக்கைகள் தொடர்பில் அக்கட்சியினர் நேற்றைய சபை அமர்வில் பல விடயங்களில் கறுவிக் கொண்டிருந்தனர்.

நேற்று அமர்வு முடியும் சமயத்தில் சத்தம் சந்தடியின்றி – ஆரவாரம் இல்லாமல் – திடுதிப்பென ஒரு காரியத்தை மேயர் மணிவண்ணனும் அவரின் எடுபிடியான உறுப்பினர் ஒருவரும் சேர்ந்து நகர்த்திச் சென்றமை ஈ.பி.டி.பியை சிக்கலில் மாட்டிவிட்டு விட்டது.

யுத்தக் குற்றங்களுக்கான விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்த வேண்டும் என்று ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலைக் கோர வேண்டும் எனும் ஒரு பிரேரணையைக் கடைசிக் கட்டத்தில் பார்த்திபன் வாசிக்க, அது ஏற்றுக் கொண்டதாக அறிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார் மேயர் மணிவண்ணன்.

உண்மையில் அப்படி அறிவிக்கப்பட்ட சமயம், சபையில் பத்தொன்பது உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களில் ஏழு பேர் ஈ.பி.டி.பியினர். அவர்களையும் சேர்த்தால்தான் சபைக்குக் கோரம். அவர்கள் இல்லையானால், முதல் நாள் சபையை ஒத்திவைத்த மாதிரி கோரம் இல்லை என்று அறிவித்து சபையை ஒத்திவைத்திருக்கவே நேர்ந்திருக்கும்.

ஈ.பி.டி.பியை பயன்படுத்தி சபைக்குக் கோரத்தை ஏற்படுத்தி, ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சபையில் என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முன்னரே சபையில் ஒரு முக்கிய தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவித்து, விடயத்தை நாசூக்காக – தந்திரமாக – ஒப்பேற்றி விட்டார் மேயர்.

வெளியில், புலம்பெயர் தரப்பு ஒன்றுக்கு அளித்த வாக்குறுதிப்படி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதாக அறிவித்து, 'தமக்குரியதைத் தேடிக் கொண்டு விட்டார் மேயர். பாவம், விடயம் விளங்காமல் சபையில் இருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், கட்சித் தலைவரிடம் இனி வாங்கிக் கட்ட வேண்டியிருக்கும்.

இப்படித்தான், தரப்புகளுக்கு விளங்காமல் காய்களை நகர்த்திக் காரியம் பண்ணுகின்றார் மேயர் என்று நேற்று முன்தினம் தமிழ்க் கூட்டமைப்புத் தரப்பினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் அர்த்த பரிமாணங்களை நேற்றைய கூட்ட முடிவில் ஈ.பி.டி.பியினர் புரிந்து கொண்டிருப்பர் என நம்பலாம்.

யாழ்.நகரப் பகுதியில் வீதியின் மையத்திலிருந்து 21 அடிக்கு அப்பால்தான் கட்டடங்கள் கட்டமுடியும் என்பது மாநகர சபைத் தீர்மானம். அதை 16 அடியாகக் குறைப்பதற்கு மேயர் நேற்று தலைகீழாக நின்று முயற்சித்துப் பார்த்தார். ஆனால் சபை உறுப்பினர்களோ கட்சிப் பேதம் பார்க்காமல் ஒன்று திரண்டு நின்று அத் திட்டத்தை முறியடித்தனர்.

*“யாரோ கொழுத்த 'கேஸ்' முதல்வரிடம் சிக்கிவிட்டது போலும். அந்தத் தரப்புக்குக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்து சுளையாகச் சுருட்டுவதற்குத் திட்டம். அது தான் சட்ட விதிகளையே மாற்றத் தந்திரம் போடுகின்றார். இதற்கு இடம்கொடுக்கக் கூடாது.”* – என்று கூட்டத்தில் அமர்ந்திருந்த எதிரணித் தரப்பினர் இரண்டு பேர் தங்களுக்குள் கறுவிக் கொண்டனர் என்றும் தகவல்.

கட்சிகளைப் பிரித்தாளும் மேயர் மணிவண்ணனின் தந்திரம் – 'பாய்ச்சா' – இனிமேல் பலிக்காது என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

– மின்னல் –

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

25 ஆண்கள், 18 பெண்கள் என 43 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 151 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 72 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 81 ஆயிரத்து 812 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 96 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 20 ஆயிரத்து 810 ஆக அதிகரித்துள்ளது.

## குற்றவியல் மன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ள நிலையில் இதில் எமது மக்கள் மீது இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளை கொண்ட இவ்வுயரிய சபையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது –

இதற்கமைய, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பிற்கு குற்றவியல் நீதிமன்றிற்கு ஊடாகவோ அல்லது விசேட குற்றவியல் நீதிமன்றம் ஊடாகவோ நீதி கிடைக்க வேண்டும் எனவும் அக் கூட்டத் தொடர் எமது விடயத்தை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்று கோருகின்றோம் – என்ற பிரேரணை முன்மொழியப்பட்டது.

இதனை கூட்டமைப்பு உறுப்பினர் இராகினி வழிமொழிய சபையில் இருந்த ஈ.பி.டி.பியினர் உட்பட 19 பேரும் ஏற்றுக் கொண்டனர் என அறிவிக்கப்பட்டது. இதன்போது சபையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 7 பேர் பிரசன்னமாகியிருந்து சபையின் கோரத்தை உறுதிப்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நீண்ட முடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு விசேட உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழி தடுப்பூசி ஏற்றுவதேயாகும் என்று, உலக சுகாதார ஸ்தாபனம், வைத்திய நிபுணர்கள் மற்றும் உலகத் தரம்வாய்ந்த வேலைத் திட்டத்தினூடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி நாட்டு மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பணிகளை முன்னெடுத்துள்ளோம்.

இதுவரையில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 98 சதவீதமானோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. அவர்களில் 43 சதவீதமானோருக்கு இரண்டாம் தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதிக்குள், 100 சதவீதமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்படும்.

நாட்டை நாம் அடிக்கடி மூட நடவடிக்கை எடுத்தமையால் பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் நாட்டை மீண்டும் ஒருமுறை முற்றாக முடக்கினால், இந்நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும். அது, இந்த நாடு பொறுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை அல்ல.

விசேடமாக, ஏற்றுமதித் தொழிற்றுறையில் ஈடுபட்டிருக்கும் ஆடைத் தொழிற்றுறைக்கு, பாரியளவு ஏற்றுமதிக் கட்டளைகள் கிடைத்துள்ளன. அந்தக் கட்டளைகளை உரிய நேர காலத்துக்கு வழங்க முடியாது போனால், பாரியளவு அந்நியச் செலாவணியை நாம் இழக்க வேண்டிய ஏற்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்த நாட்டை முழுமையாக மூடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் பொதுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். மீண்டும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகச் சரிவடையச் செய்யும் நிலைமைக்குச் செல்ல முடியாது.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின்போது, நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளோரை, வாரத்துக்கு ஒரு முறையேனும் அன்டிஜன்ட் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத் துறையினருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

இனிவரும் நாள்களில், இந்த நாட்டை நீண்ட காலத்துக்கு மூடிவைக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், நாட்டிலுள்ள அனைவரும், மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்குத் தயாராக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறான முக்கியமான தருணத்தில், நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரும், இந்தத் தீர்மானமிக்க நிலைமையைப் புரிந்துகொண்டு, திட்டமிட்ட முறையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதனால், ஒரு குழுவாக, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தோற்கடிப்பதற்கு ஒன்றிணைந்துப் பணியாற்ற முன்வருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து உறவினர்கள் உடனடியாக அப்பெண்ணை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும், குறித்த பெண் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். 35 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உள்ளதா என அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (100)

## தீர்மானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் சபையின் கூட்டம் இடம்பெற்றபோது விசேட பிரேரணையாக மேற்படி விடயம் உறுப்பினர் வ.பார்த்தீபனால் முன்மொழியப்பட்டது.

கூட்டமைப்பு உறுப்பினர் திருமதி. இராகினி வழிமொழிய சபை அதைத் தீர்மானமாக ஏற்றுக்கொள்வதாக முதல்வர் அறிவித்தார். இதன்போது சபையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 7 பேர் உட்பட 19 பங்குகொண்டிருந்தனர்.

“கூட்ட நிறைவு சமயம் எந்த முன் அறிவித்தலும் தராமல், அல்லது நிகழ்ச்சி நிரலில் இல்லாமல் அது இடம்பெற்றதால் அது செல்லுபடியற்றது என்ற வகையில் எங்களால் மௌனம் காக்கப்பட்டதே அன்றி, அது எம்மாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல.” – என்றார் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா.

## இராமநாதன் நுண்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழகத்தில் அண்மையில் அனுமதிக்கப்பட்ட சித்த மருத்துவ பீடத்துடன் ஏழு பீடங்கள் உள்ள நிலையில் நேற்றைய தினம் இராமநாதன் நுண் கலைப் பீடம் 8 ஆவது பீடமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

## பல தரப்பினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடையாது என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கூறினார்.

INDIVIDUAL ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
இலகுவாக கதைக்கும் ஆங்கில வசன அமைப்பு முறை. Tenses, Active and Passive, Direct and Reported Speech
Grade 7 - GCE O/L - A/L
பட்டதாரிகள், தொழில் செய்வோர் அனைவரும்
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

காலைக்கதிர்
Kalaikkathir

# கொரோனா காலத்திலும் வடக்கில் இடமாற்றமாம்!

## ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தொழிற்சங்கங்கள் முறைப்பாடு

நாடு முழுவதுமாக கொரோனா பேரலையில் சிக்கியிருக்க வடமாகாணசபை அதிகாரிகளோ பணியாளர்களை இடமாற்றத்தின் கீழ் பந்தாடத் தொடங்கியிருக்கின்றனர் என இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தற்போது முன்களப் பணியாளர்களாக செயற்பட்டுவரும் சுகாதார சேவைகள் திணைக்கள சாரதிகள் முதல் உள்ளூராட்சி மன்றப் பணியாளர்கள் வரையாக இடமாற்றத்தை அரங்கேற்ற வடமாகாணசபை அதிகாரிகளில் ஒரு சாரார் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமாகாணசபையில் பணியிலுள்ள அதிகாரிகள் பலரும் பத்து முதல் 25 வருடங்கள் வரையில் வடமாகாணசபையிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ காலமோட்டிக்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய சூழலில் தங்கள் கதிரைகளை தக்கவைத்தவாறே உத்தியோகத்தர்களை இடமாற்றமென பந்தாடுகின்றனர் என தொழிற்சங்கங்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளன.

அதிலும் சில அதிகாரிகள் அதே பதவியில் 13 வருடங்கள் வரை பணியாற்றுகின்றமை தொடர்பாகவும், இன்னும் சிலரோ யாழ்ப்பாணத்திலேயே 25 வருடங்களுக்கு மேல் ஓட்டிக்கொண்டிருப்பது தொடர்பிலும் பட்டியல் பிரகாரம் விவரங்களை தொழிற்சங்கங்கள் அனுப்பி வைத்துள்ளன எனத் தெரியவந்துள்ளது.

தற்போதைய கொரோனா பெருந்தொற்றில் முக்கிய பணிகளை ஆற்றிவருபவர்களாக வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் திணைக்களமும் அதன் கீழுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளுமே. அதேபோல உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றங்களும் நெருக்கடி நிலையில் தமது கடமைகளை ஆற்றி வருகின்றன.

இந்நிலையில் கொரோனா பெருந்தொற்று மற்றும் அதனால் அதிகரித்துவரும் மரணங்கள் பற்றிக் கண்டுகொள்ளாது உத்தியோகத்தர்களையும் சாரதிகளையும் இடமாற்றத்தில் செல்ல வடமாகாண சபை அதிகாரிகள் நிர்ப்பந்தித்து வருகின்றனர். தற்போதைய பெருந்தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க பணியாற்றுவதா அல்லது இடமாற்றம் பெற்று செல்வதா என்ற கேள்விக்கு அனைவரும் தள்ளப்பட்டுள்ளனர் என ஊழியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. குறிப்பாக அம்புலன்ஸ் சாரதிகள் மிக முக்கிய பணிகளை ஆற்றிவருகின்ற சூழலில் திட்டமிட்டு அவர்களையும் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டிலும் சாரதிகளை இடமாற்றம் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிசுபிசுத்துப்போயுள்ள நிலையில் தற்போதைய பெருந்தொற்றைப் புறந்தள்ளி இடமாற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டது எவ்வாறு என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஆளுநரது அனுமதியுடனேயே இடமாற்றத்தை முன்னெடுப்பதாக அறிவித்துள்ள நிலையில் இதன் உண்மையை வெளிப்படுத்த தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

# கனரக வாகனம் கோர விபத்து தலவாக்கலையில் இருவர் காயம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை ஹற்றன் பிரதான வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 7 மணியளவில் பஸ் ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பகுதியிலிருந்து ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு ஊழியர்களை ஏற்ற தலவாக்கலை சென்.கிளயார் பகுதியை நோக்கிச் சென்ற பஸ் ஒன்றும் ஹற்றன் பகுதியில் இருந்து நுவரெலியா பகுதிக்கு சென்ற கனரக வாகனம் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் லொறியின் சாரதியும், பஸ்ஸின் சாரதியும் காயமடைந்துள்ளனர். இந்த விபத்துக் காரணமாக சுமார் 30 நிமிடங்கள் ஹற்றன் – நுவரெலியா வீதி ஊடான போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகின.

குறித்த கனரக வாகன சாரதிக்கு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போனதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரும் தொகைக் கஞ்சாவுடன் தொண்டைமானாறில் மூவர் கைது!

யாழ். தொண்டைமானாறு பகுதியில் வைத்து சுமார் 168 கிலோகிராம் எடையுடைய கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 2 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் அவர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட உள்ளனர்.



# நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு கிடையாதாம்

## உதய கம்மன்பில அறிவிப்பு

நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு கிடையாது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என வெளியான தகவல்களை அடுத்து பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வரிசையில் காத்திருந்தனர்.

எனினும், நாட்டில் எரிபொருளகளுக்கு தட்டுப்பாடு எதுவும் கிடையாது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால் அது தொடர்பாகத் தாமே மக்களுக்கு முதலில் கூறுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

தாம் மக்களுக்கு நேர்மையாக இருக்கிறோம் எனவும், எரிபொருள் விலை உயர்வு குறித்து கூட தாம் முன்கூட்டியே அறிவித்தோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி நெருக்கடி நிலைமை குறித்தும் தாமே முதலில் நாட்டு மக்களுக்கு அறிவித்தோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை ஏற்பது தொடர்பில் இலங்கையின் தீர்மானம்?



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை இலங்கை ஏற்குமா என்பது தொடர்பாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை என அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளரும் ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சகத்தை முடிவு செய்ய உத்தரவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஆப்கானிஸ்தானின் முன்னேற்றங்களை இலங்கை பின்பற்றி வருகிறது என்றும் அவர் கூறினார்.

எஸ்.ஏ.ஆர்.ஆர்.சி. பிராந்தியத்தில் உள்ள நாடு என்பதால் ஆப்கானிஸ்தானின் நிலைமையை இலங்கை கவனத்தில் எடுத்துள்ளது என்றும் டலஸ் அழகப்பெரும கூறினார்.

தலிபான்கள் தலைமையில் ஆப்கானிஸ்தானில் உருவாகும் அரசாங்கம் தொடர்பாக இலங்கையின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சு விவாதித்து அறிவிக்கும் என்று அமைச்சர் கூறினார்.

இதேநேரம், ஆப்கானிஸ்தான் மக்கள் நாட்டைவிட்டு வெளியேற முயன்று வருகின்றமையால் இலங்கை வருத்தமடைவதாகவும் அவர் கூறினார்.


## 45ஆம் நாள் வீட்டுக் கிருத்தியமும் நன்றி நவிலலும்

மண்ணில் 15 – 03 – 1992



விண்ணில் 09 – 07 – 2021

அமரர் **வைரவநாதன் யசோதரன்**

(தொழில்நுட்ப உதவியாளர் – விவசாய விரிவாக்கம்)

கடந்த 09/07/2021 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்ப அன்புறவு வைரவநாதன் யசோதரன் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 22.08.2021 அன்று ஞாயிற்றுக்கிழமை இன்பர் சிட்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்றே அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எமது துயரத்தில் நேரில் பங்குகொண்ட உறவுகளுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து அன்புறவுகளுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(நாட்டின் தற்போதைய பொது சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்)

வெள்ளை புற்றடி, அல்வாய் வட மத்தி, அல்வாய்.

தகவல்:- குடும்பத்தினர் 0778691801

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தாமதம் - பெரும் முட்டாள்தனம்

**ஒரு மாதம் முழு நாட்டையும் ஒரேயடியாக முடக்குங்கள். குறைந்தது மூன்று வாரங்களாவது நாட்டின் அசைவியகத்தை தடுத்து நிறுத்துங்கள் என்றெல்லாம் சுகாதார – மருத்துவத் துறையினரும், துறைசார் விற்பன்னர்களும், மருத்துவர்களும் கெஞ்சி, மன்றாடி, இறைஞ்சி, விநயமாகக் கேட்ட போது செவிமடுக்காமல் இருந்த கோட்டா ஆட்சிப் பீடம் கடைசியாக இறங்கி வந்திருக்கின்றது.**

**அதுவும், நாட்டைப் பத்து நாள்களுக்கு முடக்குவதற்கு.**

**அதுவும், துறைசார் நிபுணர்கள் கேட்டுக் கொண்டமைக்கு அமைய அல்ல, மகா சங்கத்தினர் கேட்டுக் கொண்டமைக்கு அமையவாம்.**

**அதுவும், சுமார் எழுபத்தியைந்துக்கும் மேற்பட்ட நகரங்களும், பிரதேசங்களும், அரசின் உதாசீனப் போக்கால் – பொறுப்பற்ற செயற்பாட்டால் – வெறுப்படைந்து தத்தம் பாட்டில் தத்தமது பிரதேசங்களை முடக்குவது என்ற தீர்மானம் எடுத்த பின்னர், அதனால் அரசியல் ரீதியாகவும், அரசாட்சி நிர்வாக ரீதியாகவும் அவப்பெயர் ஏற்படும் சூழ்நிலையில், இந்த அறிவிப்புக்கு அரசு வந்திருக்கின்றது.**

**'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுவது' போன்ற அறிவிப்பு இது.**

**'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்ய முனைவதற்கு ஒப்பான' நடவடிக்கை இது.**

**கொவிட் தடுப்பு, பரவல் கட்டுப்பாடு போன்றவை உரிய காலத்தில், உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.**

**அது விடயத்தில் மெத்தனபோக்கில் செயற்பட்ட அரசு இப்போது இந்த முடிவுக்கு வந்தமை கூட இதய சுத்தியோடு, கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நன்னோக்கில் அல்ல என்பது தெரிந்த விடயம்.**

**தன்னை மீறி மக்களே தம்பாட்டில் நாட்டை முடக்கி விடும் நெருக்கடி எழுந்துள்ளது என்ற யதார்த்தம் புரிந்தமையாலேயே வேறுவழியின்றி தானும் முன்னின்று முடக்கத்தை முன்னெடுப்பதாக அது கதையளக்கின்றது என்பது பகிரங்க இரகசியமாகும்.**

**காலம் பிந்தி – இவ்வளவு இழுபறிகளுக்கு பின்னர் – இந்த நடவடிக்கையை அரசு எடுப்பதற்கு இணங்கியிருக்கின்றது.**

**நேரத்துடனேயே இந்த முடக்கத்துக்கு அரசு இணங்கியிருக்குமானால் – அதுவும் ஒரு மாதமோ, அதற்குக் கூடிய நாள்களோ இத்தகைய முடக்கம் ஒன்றை அரசு அறிவித்திருக்குமானால் – பல்லாயிரம் உயிர்களின் இழப்பைக் குறைத்திருக்க முடியும். மேலும் பல்லாயிரம் பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாவதைத் தடுத்திருக்க முடியும். முடக்கத்தைப் பயன்படுத்தி மேலும் பல்லாயிரம் பேருக்குத் தடுப்பூசியை நேரத்துடன் போட்டிருக்க வாய்ப்பும் கிடைத்திருக்கும்.**

**ஒரு புறம் முழு முடக்கத்தை நேரத்துடன் பிரகடனப்படுத்தி, தொற்றுப் பரவலை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்டு, அந்தச் சமயத்தில் தொற்றுப் பரவலுக்கு எதிரான மனிதரின் எதிர்ப்புச் சக்தியை – காலஅரணை – வலுப்படுத்தும் விதத்தில் தொற்றுத் தடுப்பூசி வழங்கலை முழு முனைப்பாக முன்னெடுத்த பின்னர், நாட்டின் முடக்கத்தை நீக்கியிருப்போமானால், பரவலுக்கு எதிரான வலிமையுடன் நாடு ஓரளவுக்குத் தாக்குப் பிடித்திருக்க முடியும்.**

**ஆனால் ஆட்சித் தலைமையின் மெத்தனப்போக்கு, வீண் பிடிவாதம், அர்த்தமற்ற விடாப்பிடி நிலைமை ஆகியவை சேர்ந்து நாட்டுக்கும் மக்களும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி விட்டன என்பது அப்பட்டமான உண்மை.**

**நாட்டை பத்து நாள்கள் மூடும் தீர்மானத்தை இரண்டு மாதங்களுக்கு முன்னர் எடுத்திருந்தாலும் அதனால் நாட்டுக்கு வரக் கூடிய பொருளாதார இழப்பு, இப்போது பத்து நாளில் ஏற்படும் இழப்பை விட பெரியளவில் வேறுபட்டிருக்க மாட்டாது.**

**ஆனால் நேரத்துடன் இந்த முடக்கம் வந்திருந்தால் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தலில் அது காத்திரமான – முன்னேற்றமாக – ஆக்கபூர்வமான பெறுபேறுகளைத் தந்திருக்கும் என்பது நிச்சயம்.**

**அந்த வகையில் பார்த்தால் இந்த முடக்கத்தை வேண்டுமென்றே தாமதித்தன் மூலம் பெரும் முட்டாள்தனம் பண்ணியிருக்கின்றது கொவிட் தடுப்பு செயலணி என்பது வெளிப்படையாக நிரூபணமாகும்.**

# தற்போதைய நிலைமை மிகவும் அதிதீவிரமானது!

### தலைமை தாதிய அதிகாரி எச்சரிக்கை

தற்போதைய நிலைமை மிகவும் தீவிரமானது என கொழும்பு தேசிய மருத்துவமனையின் தலைமை பயிற்சி தாதிய அதிகாரி புஷ்பா ரம்யானி சொய்சா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

தற்போதைய நிலைமை கட்டுப்படுத்தப்படாமல் இருந்தால், ஏனையவர்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது அவர்களுக்கு சேவை செய்ய எந்த ஊழியரும் இருக்க மாட்டார்கள்.

நிலைமை மோசமடைந்து வருகின்றது. தாமதமின்றி உடனடித் தீர்வுகளைத் தேடுமாறு சுகாதார அதிகாரிகளிடம் வேண்டுகின்றோம். செய்யவேண்டியது சவக்கிடங்குகளை அதிகரிப்பதோ அல்லது வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோ அல்ல.

தற்போதைய கொவிட் வைரஸ் நிலைமையை நிர்வகிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தான் தீர்வு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது வைத்தியசாலை ஊழியர்கள் அதிகரிக்க மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக, சுகாதார ஊழியர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளனர் எனவும், மக்களின் உயிருக்கு ஆபத்து உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வைத்தியசாலைகளுக்கான உதவிகள் புலம்பெயர் இலங்கையரிடம் எதிர்பார்ப்பு

### கோருகின்றார் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி



இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு உதவிகளை வழங்குமாறு வெளிநாட்டு வாழ் இலங்கையர்களிடம் இராஜாங்க அமைச்சரும், விசேட வைத்திய நிபுணருமான சுதர்ஷினி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுடனான உரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் வைத்தியசாலைகளில் வைத்திய உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுவதால் அவற்றை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், ஒட்சிசன் தட்டுப்பாடும் நிலவுகிறது. இவற்றைப் பெற்றுக்கொடுக்குமாறு வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# இத்தாலியிலிருந்து திருமணத்துக்காக வந்த தாய் மற்றும் மகன் கொரோனாவால் சாவு

இத்தாலியில் இருந்து திருமணம் செய்து கொள்வதற்காக இலங்கை வந்த இளைஞன் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் மற்றும் அவரது தாயாரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இத்தாலியின் மொன்சோ நகரத்தில் தொழில் செய்து வந்த இளைஞன் இலங்கை வந்துள்ளார்.

திருமணம் செய்துகொள்வதற்காக கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் அவர் இலங்கை வந்துள்ளார் என குறிப்பிடப்படுகின்றது. இலங்கை வந்தவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்துள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞர் 27 வயதுடையவர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இவர் இந்த மாதம் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருந்துள்ளார்.

மகன் உயிரிழப்பதற்கு முன்னர் அவரது தாயாரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது. மகன் உயிரிழப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் தாய் உயிரிழந்துள்ளார்.

திருமணத்துக்கான ஏற்பாடுகள் நடந்து வந்த நிலையில் இவ்வாறு குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த தாயும் மகனும் தங்கொட்டு வடக்கு கோனவில கிராகல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என செய்தி வெளியாகியுள்ளது.

இந்த மாதம் உயிரிழந்த இளைஞர் திருமணம் செய்துகொள்ளவிருந்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# 18 ஈழத் தமிழர்கள் தற்கொலை முயற்சி தமிழ்நாட்டு அரசிடம் அவசர கோரிக்கை

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்தது

திருச்சி மன்னார்புரம் சிறப்பு முகாமில் 18 ஈழத் தமிழர்கள் கூட்டாக தற்கொலை செய்து கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சி உலகத் தமிழர்களை பெரிதும் துயரிலும் கவலையிலும் ஆழ்த்தியுள்ள நிலையில், இவ்விடயம் தொடர்பில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அவசர கோரிக்கையொன்றினை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

அளவுக்கதிகமான தூக்க மாத்திரைகளை உண்டும், ஒருவர் வயிற்றை கிழித்தும், இன்னொருவர் கழுத்தை அறுத்தும், இருவர் தூக்கிட்டுக் கொண்டும் தற்கொலை முயற்சி மேற்கொண்டிருப்பதான செய்திகளும், காட்சிகளும் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளன.

நீண்டகாலமாக இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள், தாங்கள் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளோம் எனவும், தண்டனைக் காலம் முடிந்தும் தங்களை மேலும் சிறையில் அடைத்து வைத்துள்ளதாகவும் கூறி வருகின்றமையோடு, கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்நாட்டு அரசின் சார்பாக அகதிகள் மறுவாழ்வுத் துறை ஆணையர், சென்னையிலிருந்து இந்தச் சிறப்பு முகாமிற்கு நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை சந்தித்திருந்தமையோடு, 20நாள்களில் விடுதலை செய்வதென வாக்குறுதி அளித்திருந்தார் எனவும் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்நிலையில் இவை பலன் அளிக்காதமை காரணமாகவே இவர்கள் கூட்டாக தற்கொலை செய்ய முயற்சித்திருக்கின்றமையானது பெரும் கவலையை உலகத்தமிழர்களிடையே ஏற்படுத்தியுள்ள விடுதலையை உறுதிசெய்ய வேண்டுகின்றோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 57

ந.வித்தியாதரன்

'தினபதி', 'சிந்தாமணி' ஆசிரியர் பீடத்தை பல் கலைக்கழகம் என்றோம். ஆசான் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவை துணைவேந்தர் என்றோம். இவை எல்லாவற்றையும் தாண்டி, அவர் ஒரு கலைக்களஞ்சியமாகவே திகழ்ந்தார் – ஊடகத் துறையில் மட்டுமல்ல, அதற்கு அப்பாலும்.

ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு பொதுவாகத் தான் கையாளும் மொழியில் பாண்டித்தியம் இருக்க வேண்டும். தமிழ்மொழி கைவரப்பெற்ற புலமையாளர் அவர். ஒவ்வொரு செய்தியிலும், ஒவ்வொரு வசனத்திலும், தமிழ்மொழியின் லாவகத்தை அவர் பார்ப்பார். இறுக்கமாக, சுருக்கமாக, கருத்துச் செறிவு மிக்கதாக வசனங்கள் இருக்க வேண்டும். தேவையற்ற சொல்லாடல்கள் தவிர்க்கப்பட வேண்டும். நீண்ட வசனங்களை இயன்ற வரைத் தவிர்த்து, வசனங்களை முறித்துச் சின்னச் சின்ன அணிகளில் சொற்களைக் கோர்த்து, செய்திகளைக் கட்டமைக்க வேண்டும். வசனங்களில் ஒருமை – பன்மை, உயர்திணை – அஃறிணை, எழுவாய் –பயனிலை எல்லாம் கனகச்சிதமாக இருக்க வேண்டும். முடிந்த வரை தமிழ் மக்களுக்கு விளங்கக் கூடிய, தூய, கலப்பற்ற தமிழைப் பயன்படுத்த வேண்டும். செய்தி ஓட்டத்தில் – மொழிப் பண்பில் – ஒரு சீர்மை இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் அப்பால் பாமரரும் விளங்கக் கூடியதாக செய்திகளை – ஆக்கங்களை – வரைய வேண்டும்.

*"சங்கீதக் கட்டுரையைப் பத்திரிகையில் வெளியிடுங்கள். ஆனால் சங்கீத வித்துவான் மட்டும்தான் அதை புரிந்துகொள்ள முடியும் என்ற அடிப்படையில் அக்கட்டுரை இருக்கக்கூடாது. பாமரனும் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடியதாக அது இருக்க வேண்டும். அதுதான் ஜனரஞ்சகப் பத்திரிகைக்கு அழகு"*என்பார்.

ஆழமான அரசியல் விவகாரங்களை கூட எளிய தமிழில், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளத்தக்கதாக வரைவதில் அவர் வல்லாளர்.

தலைப்பிடுவதற்கான சில அடிப்படை வரைமுறைகளையே வகுத்தவர் அவர். இன்று ஊடகங்களைக் கையாண்டு வழி நடத்தும் பொறுப்பில் இருக்கும் பலருக்கும் அப்படி எல்லாம் இருக்கின்றன என்று தெரியுமோ, என்னவோ...!

ஊடகத்துறையில் – பத்திரிகைத் துறையில் – ஒரு ஆசிரியராக அல்லது உதவி ஆசிரியராக பரிணமிப்பதற்கு செய்திகளை கையாளத் தெரிந்தால் போதும் என்பதுதான் எங்கள் எல்லோரதும் அளவுகோல்.

ஏன், எங்களையே எடுத்துக்கொள்வோம். நம்மில் பலர் செய்திகள் வரைவோம். வந்த செய்தியை எடிட் பண்ணுவோம். அதற்குக் கனகச்சிதமாக தலைப்புக் கூடப் போடுவோம். பல உதவி ஆசிரியர்களுக்கு இதற்கப்பால் விடயமே தெரிவதில்லை.

அந்தச் செய்திகளில் வந்த விடயத்தை வைத்து ஒரு கட்டுரை தயார் செய்யுங்கள் என்றால் முழுசுவார்கள்.

செய்தி வரைதல், அறிக்கையிடல் ஆகியவற்றுக்கு அப்பால் கட்டுரைகள், விவரணங்கள் வரைதல்,



காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்



ஆசிரியர் தலையங்கங்கள் எழுதுதல், மொழிபெயர்ப்பு, கவிதை, இலக்கியம், கதை, நாவல் என்று நமது எழுத்துத்துறை பரந்தது; விசாலமானது; ஆழமானது. இதில் ஓரிரண்டை பற்றிப் பிடித்துக் கொண்டு பெரிய வித்துவான்கள் போல நாம் ஆலாபரணம் பண்ணிக் கொண்டு இருக்கின்றோம். எனது 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஊடகத்துறை அனுபவத்தில் சிந்தாமணி பத்திரிகையில் ஓரிரு தடவைகளும், ஆனந்த விகடனில் ஒரு தடவையும் ஓரிரு சிறுகதை எழுதிய நினைவு உண்டு. கவிதைக்கும் எனக்கும் வெகு தூரம். யாழ்ப்பாணத்தில் ஹாஸ்யக் கவிதைகள் எழுதி ஒரு கலக்கு கலக்கிய முன்னாள் நீதிபதி திருநாவுக்கரசு (விகடகவி) அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றன போல 'கவிதைக்கு சிறந்த விமர்சகன் வித்தி' என்ற மாதிரி கவிதையைப் பொறுத்தவரை நான் ஒரு சுவைஞன், ரசிகன், விமர்சகன் மட்டுமே.

ஆனால் இப்படி எழுத்துத்துறையில் எல்லா பிரிவுகளிலும் பழம் தின்று கொட்டை போட்ட ஒருவர் இருக்க முடியுமென்றால் அது எஸ்.டி.எஸ். ஐயா மட்டுமே.

எஸ்.டி.சிவநாயகம் ஐயாவின் கவித்துவப் புலமை அளவிட முடியாதது. மரபுக் கவிதைகளில் மட்டுமல்லாமல், புதுக்கவிதையிலும் அவர் விற்பன்னர். சிந்தாமணி வார இதழின் முற்பக்கத்தில் வரும் பெண்ணோவியங்களுக்கு நான்கு அடிகளில் மரபுக் கவிதையில் அவர் படைக்கும் சொல்லோவியத்திற்கு காத்துக்கிடந்த வாசகர்கள் பல்லாயிரம் பேர்.

எப்படி தமது மூன்றரை, நான்கு தசாப்த கால ஊடகப் பணி மூலம் பலநூறு பத்திரிகையாளர்களை – பெயர் கூறிக் குறிப்பிடக்கூடிய ஊடகவியலாளர்களை – தனது பண்ணையில் சிவநாயகம் ஐயா தயார் பண்ணி சமூகத்துக்கு அளித்தாரோ, அதுபோல பல நூறு கவிஞர்களை அவர் தமிழுலகத்திற்கு வளர்த்து வழங்கிவிட்டே சென்றிருக்கின்றார். சுதந்திரனிலிருந்து சூடாமணி வரை அவரது கவிதைப் பண்ணையிலேயே வளர்ந்த அற்புதக் கவிஞர்கள் பல நூறு பேர்.

கவிதைத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு, அவருக்கிருந்த புலமை, வல்லமை போன்றவை தனித்துவ ஆய்வுக்குட்படுத்தப்படக் கூடிய ஆழமான சமாச்சாரங்கள்.

பத்தாயிரத்துக்கும் மேல் கவிதைகளை இயற்றி, பல காப்பியங்களை படைத்த அகமது ஜின்னா ஷரிபுத்தீனைக் கேட்டால், சிவநாயகம் ஐயாவின் கவித்துவத்திறமைபற்றிவியப்புடன்மணிக்கணக்காகப் பேசுவார். தமிழ்க் கவிதைத் துறையில் சிகரம் என விளங்கும் ஜின்னா ஷரிபுத்தீன் இத்துறையில் தம் வழிகாட்டியாக மதிப்பவர் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவைத்தான். எழுத்துத்துறையில் இப்படிப் பல்வேறு பிரிவுகளில் தம் திறமைகளால் உயர்வை எட்டியவர்கள் பலர் தங்கள் குருவாக சிவநாயகம் ஐயாவை இன்றும் மதிப்பது அவர் பெருமைக்கு சான்று.

வெறுமனே செய்தி, செய்தி விவரணம், ஆசிரியர் தலையங்கங்கள் என்று அவர் பணி அடங்கி விடவில்லை. கட்டுரைகள், கதைகள், கவிதைகள் என எழுத்தோட்டத்தின் ஒவ்வொரு பரப்பையும் அவர் ஆக்கிரமித்து நின்றார். பயணக் கட்டுரைகளில் இருந்து ஆய்வுக்கட்டுரைகள் வரை ஒவ்வொரு வகையிலும் அவரின் தனித்துவத்தை நாங்கள் பார்க்க முடியும்.

தனித்துத் தமது திறமையை அவற்றில் அவர் வெளிப்படுத்தினார் என்பதையும் தாண்டி, இத்துறைகளில் திறமை உள்ளவர்களை அடையாளம் கண்டு அந்தந்தத் துறைகளில் அவர்களைத் தூக்கி நிறுத்தினார் என்பது முக்கியமானது.

அவரது மருமகன் டாக்டர் அருள் இராமலிங்கம் விஞ்ஞானக் கட்டுரைகள், விண்வெளிப் பயணத் தொடர்கள் எழுதுவதில் வல்லவர். எழுத்தாளராக அவரையும் ஊக்குவித்தார் ஐயா. டாக்டர் அருள் இராமலிங்கத்தின் கைவண்ணத்தில் பல விஞ்ஞானத் தொடர்களை நாம் கண்டோம்.

டாக்டர் அருள் இராமலிங்கம் புகழ்பெற்ற – கைராசிக்கார – மருத்துவராக ஓங்கியிராவிட்டால் அவருக்குள் இருக்கும் எழுத்தாளன் என்ற மனிதன், அவரை எழுத்துலகில் மாமனார் சிவநாயகத்திற்கு நிகராகத் தூக்கி நிறுத்தி இருக்கும் என்ற உண்மை எனக்குத் தெரியும். மருத்துவ உலகம் அவரை தத்தெடுத்துக் கொண்டது. அதனால் எழுத்துலகம் சிவநாயகத்தின் ஒரு வாரிசை கோட்டை விட்டு விட்டது.

இப்படி சிவநாயகம் ஐயாவின் கீழ் முகிழ்ந்த முத்துக்களைப் பட்டியலிட்டால் அது ஒவ்வொரு துறை சார்ந்தும் நீளும். அவரின் கைப்பக்குவத்தில் புடமிடப்பட்ட கவிஞர்கள் போல ஒட்டுமொத்தத் துறைகளிலும் அவர் வனைந்த விற்பன்னர்கள் நிறைய உள்ளனர்.

ஆனால் சிவநாயகம் ஐயாவை இத்துறைகளில் புடமிட்டவர் யார்? எனக்கு விடை தெரியாத வினா இது. ஆனாலும் அவரின் நண்பர்களான என் தந்தையாரிடமும் பிறரிடம் இருந்து பெற்றுக்கொண்ட தகவலில் இருந்து ஒரு முடிவுக்கு வந்தேன்.

அவர் பின்னாள்களில் தம்மைப் பிணைத்துக் கொண்ட மட்டக்களப்பின் கொக்கட்டிச்சோலையில் உள்ளது தான்தோன்றீஸ்வரர் ஆலயம். தான்தோன்றீஸ்வரர் போல இத்துறைகளில் – குறிப்பாக – ஊடகத் துறையில் தாமாக தம்மை வளர்த்துக் கொண்டவர் தான் சிவநாயகம் ஐயா.



டாக்டர் அருள் இராமலிங்கம்

அவரது கல்விக் காலம் திருகோணமலையில் தான் கழிந்தது. அங்குதான் இந்த அடிப்படைகளையும் அவர் கற்றுக் கொண்டார்.

முப்பது வயதிலேயே அவர் பத்திரிகை ஆசிரியராகி விட்டார். அந்த வயதில் தமக்குத்தாமே பத்திரிகை தர்மத்தின் அடிப்படையில் கொள்கைகளை வகுத்து, தம்மை நிறுத்திக்கொண்டார் அவர். இன்னோரன்ன பல துறைகளில் தம்மை – தமது அறிவை – தாமே மேம்படுத்திக் கொண்டார். அவருக்கு இயல்பாகவே இருந்த ஆங்கிலப் புலமை இத்துறையில் சுயமான தேடுதல்களை மேற்கொண்டு, அறிவை விருத்தி செய்து, ஒரு சுய வழிகாட்டலுக்கு வழிசெய்தது என்றே நான் கருதுகிறேன்.

(வளரும்....)

# பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனை செய்த இருவர் கைது

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டுவந்த பிரபல போதைப்பொருள் வியா பாரிகள் இரண்டு பேர் ஓட்டோவுடன் நேற்று (வெள்ளிக் கிழமை) கல்குடா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

மட்டக்களப்பு கல்குடா – பிறைந்துறைச்சேனைப் பிர தேசத்தில் கைதுசெய்யப்பட்ட இவர்களிடமிருந்து ஹெரோ யின் போதைப்பொருள் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள் ளன என கல்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கல்குடா பொலிஸ் பிரிவின் சில பகுதிகளில் அண் மைக்காலமாக ஒரு குழுவினர் மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவரு கின்றனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இது தொடர்பாகப் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டுவந்த நிலையில் இவர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.



இவர்கள் போதைப்பொருள் விற்பனையாளர்கள் என்ற ஓர் அமைப்பாக செயற்பட்டுவருகின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், ஆகி யோரின் வழிகாட்டலில் கல்குடா பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# லிட்ரோ விலையும் அதிகரிக்கப்படும்!

## நுகர்வோர் அதிகாரசபை

*லாப் காஸ் விலை அதிகரிப்புக்கு நிகராக லிட்ரோ காஸ் விலையை அதிகரிக்குமாறு லிட்ரோ காஸ் நிறுவனம் கோரி இருக்கின்றது.*

*அதன் பிரகாரம் விரைவில் விலை அதி கரிப்பு மேற்கொள்ளவேண்டி வரும். இல்லா விட்டால் வழக்கு விசாரணைக்கு செல்ல வேண்டிவரும் என நுகர்வோர் அதிகாரசபை பணிப்பாளர் குஷான் குணவர்த்தன தெரிவித்தார்.*

*லிட்ரோ காஸ் நிறுவனம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிக்குமாறு தெரிவித்து விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.*

*இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரி விக்கையில் -*

*காஸ் விநியோகம் தனி உரிமை சந்தைப் பங்கைக்கொண்ட இரண்டு நிறுவனங்களுக் கிடையில் இருப்பதால், ஒரு நிறுவனத்துக்கு காஸ் விலையை அதிகரிப்பதற்கு அனுமதித் தால், மற்ற நிறுவனத்துக்கு அந்த வசதியை பெற்றுக்கொடுப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை கடமைப்பட்டிருக்கின்றது.*

*அதன் பிரகாரம் லாப் காஸ் விலை அதி கரிப்பு மேற்கொள்ளப்பட்டதன் பிரகாரம் லிட்ரோ காஸ் 12.5 கிலோ கிராம் சிலிண்டர் 363 ரூபாவாலும் 5 கிலோ கிராம் கொண்ட சிலிண்டரின் விலையை 145 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு இருக்கின்றோம். இன்னும் சில தினங்களில் விலை அதிகரிப்பு மேற்கொள் ளப்படும். - என்றார்.*

# 2 ஆவது டோஸ் தடுப்பூசியை பெறலாம்

**(சாவகச்சேரி நிருபர்)**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த காலங்களில் கொவிட் தடுப்பூசியின் முதல் ஊசியைப் பெற்ற பலர் உரிய காலம் கடந்தும் இரண்டாவது தடுப் பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த காலங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒவ் வாமை உடைய பலர் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையின் சிபாரிசுடன் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் கொவிட் 19 நோய்த் தொற்றுக்கான முதல் தடுப்பூசியை பெற்றுக்கொண்டிருந்தனர். அவ்வாறு முதலாம் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களில் பெரும் பாலானவர்கள் உரிய காலம் கடந்தும் இரண்டா வது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை. முத லாவது தடுப்பூசி செலுத்தி உரிய காலத்தை பூர்த்தி செய்தவர்கள் இன்று (சனிக்கிழமை) சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் தமக்கான இரண்டாவது தடுப் பூசியை காலை 8.30 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ள முடியும் என வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித் துள்ளார்.

அத்துடன் தடுப்பூசி பெற வருவோர் உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் மேலும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# வர்த்தக அமைச்சர் தனது சம்பளத்தை கொரோனா நிதியத்துக்கு வழங்கினார்

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர் தன தனது மாதாந்த சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

நாட்டில் நிலவி வரும் நிதி நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு அவர் இவ்வாறு தனது சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

அமைச்சரின் இந்த நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராட்டி யுள்ளார் என ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர கடிதம் மூலம் அமைச்சர் பந்துலவிற்கு அறிவித்துள்ளார்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | விஞ்ஞானம் | அலகு 14

### எண் வகைகளும் எண் கோலங்களும் - விடைகள்

1. ஒற்றை எண்
   1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21, 23, 25, 27, 29

இரட்டை எண்
   2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20, 22, 24, 26, 28, 30

2. 2
3. 4
4. முதன்மை எண்
   17, 19, 11, 37

சேர்த்தி எண்
   30, 25, 24, 15, 20, 45, 49, 40

5. 1

1. முக்கோண எண்
   10, 15, 21, 36
2. சதுர எண்
   9, 16, 25, 36
   3. 36
   4. 36
   5. 34

6. 52


| எண்கள் | ஒற்றை எண்கள் | இரட்டை எண்கள் | முதன்மை எண்கள் | சேர்த்தி எண்கள் | சதுர எண்கள் | முக்கோணி எண்கள் |
|---|---|---|---|---|---|---|
| 8 | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | இல்லை |
| 12 | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | இல்லை |
| 15 | ஆம் | இல்லை | இல்லை | ஆம் | இல்லை | ஆம் |
| 17 | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | இல்லை | இல்லை |
| 21 | ஆம் | இல்லை | இல்லை | ஆம் | இல்லை | ஆம் |
| 25 | ஆம் | இல்லை | இல்லை | ஆம் | ஆம் | இல்லை |
| 29 | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | இல்லை | இல்லை |
| 30 | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | இல்லை |
| 33 | ஆம் | இல்லை | இல்லை | ஆம் | இல்லை | இல்லை |
| 36 | இல்லை | ஆம் | இல்லை | ஆம் | ஆம் | ஆம் |

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

# முல்லைத்தீவில் காடழிப்புக்கு எதிராக வீதியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட அளம்பில் வடக்கு பகுதியில் காடழிப்பு இடம்பெற்று வருவ தாகவும், இதனைக் காப்பாற்றுமாறும் வீதியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - மாங்குளம் வீதியி லேயே இவ்வாறு வாசகங்கள் எழுதப்பட் டுள்ளன.



வீதியில் மஞ்சள் வர்ணத்தில் 'இராணு வமே எமது அளம்பில் காட்டினை காப் பாற்று, எமது காடுகளை விற்கும் கிராம அபிவிருத்தி சங்கம்' இலஞ்சம் வாங்கி அளம்பில் வடக்கு காடுகளை விற்கும் வன வளத்திணைக்களம், பிரதேச செய லாளரே எமது வளத்தைக் காப்பாற்றுங் கள், இலஞ்சம் வாங்கும் அளம்பில் வடக்கு கிராம சேவையாளர், அழிக்கப்படும் அளம்பில் வடக்கு காடுகள், போன்ற வச னங்கள் அடையாளம் தெரியாத நபர்க ளால் எழுதப்பட்டுள்ளன.

# லொறிகளில் களவாடி வந்துள்ள கும்பல் நோர்வூட்டில் சிக்கியது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்ஜோன்டிலரி பகுதியில் நீண்ட கால மாக உணவுப் பொருளகள் மற்றும் அத்தி யாவசியப் பொருள்கள் கொண்டு சென்ற லொறிகளில் களவாடிய கும்பல் ஒன்றை நோர்வூட் பொலிஸார் கைது செய்துள்ள னர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து களவாடிய ஒரு தொகை மரக்கறி மூடை கள் மீட்கப்பட்டுள்ளமையுடன், இதனு டன் தொடர்புடைய மூன்று பேர் கைதும் செய்யப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை மற்றும் எம்பிலிபிட் டிய பகுதியிலிருந்து பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கெலியா, ஹற்றன், நுவரெ லியா மாவட்டத்தின் ஏனைய பல நகரங் களிலிருந்து மரக்கறிகள் மற்றும் பழங்கள் தேங்காய் உள்ளிட்ட பொருள்களை ஏற் றிச் செல்லும் லொறிகளிலேயே இவ்வாறு திருட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

பொகவந்தலாவ நோர்வூட் பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெற்று வருவ தனால் இந்த வீதியில் அதிகாலை வேளை யில் செல்லும் லொறிகள் மெதுவாகச் செல் கின்றன எனவும் குறித்த கும்பலில் ஒருவர் லொறிகளில் ஏறி கையிற்றின் மூலம் வீதியில் மரக்கறி மூடைகளை இறக்குவ தாகவும் அதனைத் தொடர்ந்து பின்னால் வரும் ஓட்டோவில் ஏற்றிச் சென்று வீட்டில்



வைத்து ஒவ்வொரு மூடைகளாகக் கடை களுக்கு விற்பனை செய்வதாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் ஒருதடவைக்கு சுமார் 2 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் வரையான உணவுப் பொருள்களைக் களவாடி விற்பனை செய்துள்ளனர் என வும் இதனை நீண்ட காலமாகச் செய்து வந்துள் ளனர் எனவும் பொலிஸார் மேற் கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புடலங்காய், வெண்டிக்காய், தக்காளி, கீரை வகைகள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சந்தேக நபர்கள் மற்றும் மீட்கப் பட்ட மரக்கறிகள் கடந்த வியாழக்கிழமை ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டது என நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரேம லால் தெரிவித்துள்ளார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** நாளுக்கு நாள் கொரோனா காவு கொள்ளும் உயிர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறதே. என்னாகப் போகிறது நம் மக்க ளின் வாழ்வு?

**பதில் :-** இதைப்பற்றி நீங்களும் நானும் பேசி என்ன பயன் இருக்கப் போகிறது? சுகாதார அதிகாரிகள் ஊரை முடக்கும்படி தலைதலையாய் அடிக்கி றார்கள். அவர்கள் சொல்லையே யாரும் கேட்பதாய்த் தெரியவில்லை. நீங்களும் நானும் பேசியா பயன் வரப்போகிறது? விதிவிட்ட வழி என்று நடக்கவேண்டி யதுதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க’ ஹி..ஹி..**

**2. கேள்வி:-** அமைச்சரவை மாற்றத்தால் பயன் ஏதும் விளையுமா?

**பதில் :-** அமைச்சர்களைத் தனித்து இயங்கவிட்டால் ஒருவேளை பயன் ஏதும் விளையலாம். அப்படி நடப்பதாய்த் தெரியவில்லை. நூல் நுனியைத் தன் கையில் வைத்துக்கொண்டு ஜனாதிபதி இயக்க, பெரும்பான்மையான அமைச்சர்கள் பொம்மலாட்ட பொம்மைகளாய்த்தான் இயங்கி வருகிறார்கள். இந் நிலையே தொடர்ந்தால், அமைச்சரவை மாற்றம் எந்தப் பயனும் தரப்போவதில்லை. அமைச்சரவை மாற்றத்தில் புதிய சமையல் ஏதும் நடந்ததாய்த் தெரியவில்லை. கத்தரிக்காய்க்குப் பதிலாய் பூசணிக்காய். பூசணிக்காய்க்குப் பதிலாய்க் கத்தரிக்காய் என்பதாய்த் தான் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்த நிலையில் பயன் விளைந்தால் அது ஆச்சரியம்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘உன் கையில் அந்த நூலா நீ சொல்லு நந்தலாலா.’ பழைய பாட்டு சூப்ப்ப்ப்பருங்கோ!**

**3. கேள்வி:-** கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேசப் போவதாய்ச் செய்தி அடிபடுகிறதே?

**பதில் :-** கூட்டமைப்பிடம் இருந்து பதில் ஏதும் வராததாலும், அறிக்கை விட்டிருக்கும் அடைக்கல நாதன் நிபந்தனைகளுடன் பேசவேண்டும் என்று சொல்லியிருப்பதாலும் அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாய்த்தான் தெரிகிறது. அமெரிக்கத் தூதர் அரசுத் தலைவர்களுக்கும் கூட்டணித் தலைவர்களுக்கும் விருந்தளித்ததாய் வந்த செய்தியின் பின்தான் இத்தகைய ஒரு செய்தி பரவத் தொடங்கியிருக்கிறது. நான் முன்பு ஒருமுறை சொன்னதுபோல ‘ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா’ என்பதுதான் யதார்த்தம் போல் தெரிகிறது. அந்தக் ‘கிசுகிசு’ உண்மையாய் இருந்தால், உங்கள் கேள்வியை, ‘கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேசப்போவதாய் செய்தி அடிபடுகிறதே’ என்பதற்குப் பதிலாக, கூட்டமைப்பை அரசாங்கத்துடன் பேச வைக்கப் போகிறார்களாமே? என்று மாற்றவேண்டியிருக்கும். போரில் தோற்று நிற்கும் நம் இனத்தார்க்கு வல்லரசுகள் காட்டும் வழியை மீறி நடப்பது சாத்தியமில்லாத ஒன்றுதான். இன்றைய நிலையில் நம் இனம் செம்மறியாடகத் தான் இயங்கவேண்டியிருக்கிறது. வலிமையுள்ள யார் மேய்த்தாலும் மேயவேண்டியதுதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * பிச் சைக்காரர்கள் தேர்ந்தெடுப்பவர்க ளாக முடியாது. (Beggars can't be choosers) என்பது இதைத்தானுங்கோ.**

**4. கேள்வி:-** ஆப்கானிஸ்தான் அரசை அமெரிக்கா கைவிட்டதை யும், அமெரிக்காவின் கையாளாய் இருந்த அந்நாட்டு ஜனாதிபதி நாட்டை விட்டு ஓடியதையும், அமெரிக்க ஆதரவாளர்களாய் இருந்த ஆப்கானியர்கள் அச்சத்தால் நாட்டை விட்டு ஓட விமான நிலையங்களில் குவிந்திருப்பதையும் பார்த்தீர்களா?

**பதில் : -** உலகமே பார்க்கிறதே, நான் பார்க்காமல் இருப்பேனா? அக்காட்சிகளைக் காண நெஞ்சு பதறுகிறது. 1995 ஆம் ஆண்டு இராணுவம் உள்நுழை வதாய்ச் செய்தி வர, எட்டு லட்சம் தமிழ் மக்கள் மழை நேர இரவில் தென்மராட்சி நோக்கி ஓடிய அந்த பயங்கர அனுபவம் மீண்டும் மனதில் வந்து அதிரச் செய்தது. அமெரிக்காவை நம்பி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த ஜனாதிபதி அஷ்ரப் கனி, ஆபத்து நெருங்கியதும் தனது ஆடம்பர மாளிகையிலிருந்து




ஹெலிக்கொப்டர் மூலம் தப்பி ஓடிய செய்தி, அவரை நம்பியிருந்த மக்களையும் படைவீரர்களையும் மனதளவில் வீழ்த்திவிட்டது. அதனால்த்தான் சி.ஐ.ஏ. போன்ற வலிமை மிக்க அமெரிக்கப் புலனாய்வுத் துறையினரின் கணிப்புக்களைப் பொய்யாக்கி ஒரே வாரத்தில் ஆப்கானைத் தலிபான்கள் கைப்பற்றிவிட்டார்கள். ஆப்கானிஸ்தானுக்குள் வலியப் புகுந்த அமெரிக்கா, இன்று அவர்கள் பிரச்சினையை நாம் ஏன் சுமக்கவேண்டும்? என்று கேள்வி கேட்கிறது. பிறதேசங்களின் வலிமையை நம்பி ஆட்சி நடத்துவதால் வரும் ஆபத்தினைக் கண்கூடாக நாம் பார்க்க முடிந்தது. இவ் உண்மை நிலையை உணரவேண்டியவர்கள் உணர்வார்களா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * அரசனை நம்பிப் புருனைக் கைவிட்ட கதைதானுங்கோ.**

**5. கேள்வி:-** நமது மாணவர்களின் கல்வி தடைப்பட்டுக் கிட்டத்தட்ட இரண்டு வருடம் ஆகப்போகிறதே. இதற்கு என்னதான் முடிவு? அரசாங்கம் ஏதும் செய்யாதா?

**பதில் :-** யாரையும் இதற்காக நாம் குற்றம் சாட்ட முடியாது. யார் இப்போது அரசுப் பொறுப்பில் இருந்தாலும் இதைத்தான் செய்திருக்கமுடியும். கல்வி முக்கியம்தான். ஆனால் உயிருக்கு அடுத்தபடியாகத் தான் அதனை நாம் போற்றமுடியும். இது உலகளாவித் தோன்றியிருக்கும் பிரச்சனை. இதற்கு வெறுமனே அரசாங்கத்தைக் குற்றம்சாட்டிப் பிரயோசனம் இல்லை. இந்நோய்க்கான சரியான தடுப்பினைக் கண்டுபிடிக்கும் வரையும் நிலைமை இப்படித்தான் இருக்கப்போகிறது. முடிந்த அளவு புதிய பாடப்புத்தகங்களை வாங்கி வைத்து தெரிந்தவர்களின் துணையோடு மாணவர்கள் கல்வியில் தம்மைப் பலப்படுத்துவதைத் தவிர வேறு வழி இருப்பதாய்த் தெரியவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரியார் எப்ப அரசாங்கத்தின் ‘சப்போட்டர்’ ஆனார்?**

**6. கேள்வி: -** ஒரு மனிதனுக்கு அருள் தேவையா? பொருள் தேவையா?

**பதில் :-** தேடுகிறவனின் தேவையைப் பொறுத்த விடயம் அது. அதை நீங்களும் நானும் முடிவு செய்ய முடியாது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * நானும் வாரியாரை வழிமொழியிறனுங்கோ.**

**7. கேள்வி:-** தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு, இந்து ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்றும், அந்த ணர்கள் அல்லாதோரும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்றும், பெண்களும் அர்ச்ச கர்கள் ஆகலாம் என்றும் சட்டம் கொண்டு வந்தது பற்றி உங்கள் அபிப்பிராயம்.

**பதில் :-** கேள்விப்பட்டேன். நல்ல காரி யம்தான். ஆனால் ஒன்றே ஒன்று தான் மனதை நெருடுகிறது.



பாரதம் இந்துமதத் தாருக்கு மட்டும் உரியதல்ல. எல்லா மதத் தாருக்கும் உரியது என்று தற்போதைய பாரத அரசின் இந்துத்துவக் கொள்கையை கடுமையாக எதிர்ப்ப வர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அப்படிச் சொல்கிற அவர்கள் மட்டும் தமது மாநிலத்தில் இந்து மதத்திற்கு மட்டும் இந்த தனிச் சலுகையை வழங்க லாமா? இந்து மதத்தில் சீர்திருத்தம் கொண்டு வந்தது போல இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களிலும் அதனைக் கொண்டுவரவேண்டியதுதானே. தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் ஆயிரம் இருக்க தேவை யில்லாத பிரச்சினைக்கு வழி சமைக்கிறார்கள். வேண்டாத வேலை!

**உலகநாதரின் ஒப்பீனியன் * முதலில் புதிய முதலமைச்சரின் பெயரைத் தமிழில் மாத்தச் சொல்ல வேணும். ஹி..ஹி..**

**8. கேள்வி:-** வடமாகாண முன்னாள் முதலமைச்சர் மீண்டும் சுமந்திரனை சீண்டியிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** பாவம் அவரும்தான் என்ன செய்வார்? ஏமாந்த யாழ் மக்கள் அவரை எம்.பி. பதவி கொடுத்து கொழும்புக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவருக்கும் பொழுதுபோகவேண்டுமே. பல நாளாய் அவரது சத்தஞ்சந்தடியைக் காணவில்லை என்று நினைத்தேன். அப்போதுதான் அறிக்கை வந்திருக்கிறது. சுமந்திரனும் இல்லாவிட்டால் மீண்டும்



கூட்டமைப்புக்குள் நுழைந்து விடலாம் என்று நினைக்கிறார் போலும். முன்னர் அவர் வகித்த பதவிக்கும் அவருக்குமான தொடர்பின் தூரம் அதிகமாகிக் கொண்டே போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சொந்தக் காசில சூனியம் வைக்கிறதெங்கிறது இதத்தானோ?**

**9. கேள்வி:-** உலகமே கண்டு அஞ்சி நிற்கின்ற தலிபான்களின் புதிய அரசை சீனா முந்திக்கொண்டு ஆதரித்திருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** அது தலிபான்களுக்கான ஆதரவல்ல. அமெரிக்காவிற்கான எதிர்ப்பு. எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்ற கதைதான் அது. அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவைக் கண்டு சீனா கைகொட்டி ஆர்ப்பரிக்கிறது. மேற்கு நாடுகள் இந்தப் பிரச்சினையைச் சும்மா விடப் போவதில்லை என்பதை ஜி7 நாடுகளின் கூட்ட முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. வென்ற நண்பனை அங்கீகரித்திருக்கிறது சீனா. அதற்குப் பதிலாக அமெரிக்கா சீனாவின் வேறொரு நண்பனை விழுத்தி பழி தீர்க்க முயலலாம். அந்த நண்பனாக நாம் இருந்துவிடக் கூடாது என்பது தான் என் பிரார்த்தனை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அப்ப எதிரிக்கு நண்பன் எனக்கு எதிரியோ! கதை சோக்காத்தான் போகுதுங்கோ**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 106

**308. அப்படியான ஒரு கூட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வந்து போனார்கள்?**

அந்த விருந்தின் பின் சம்பந்தருடன் பேசிய பொழுது அப்படிஅழைப்புவந்ததாகவும்அதற்குப் பதில் போடுவதாகவும் கூறினார். அதேசமயம் தான் 27ஆம் திகதி இந்தியா செல்வதாலும் மாவையும் போக இருப்பதாலும் சந்திப்புக்கு வசதி



இருப்பதாகத் தெரியவில்லை என்று சொல்லப்பட்டது. நோர்வேயின் ஈடுபாட்டையும் மேற்கொண்ட அழிவுகளை இவை தடுக்கக் கூடும், விடுதலைப் புலிகளுக்கும் ஒரு பொதுமன்னிப்பு கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் சந்திப்பது நன்மை தரக் கூடும் என விளங்கப்படுத்தினேன். அவர் தான் மற்றவர்களோடு கலந்து நடவடிக்கை எடுப்பார் எனவும், தான் மார்ச் 27இல் இருந்து தமிழ் நாட்டில் இருப்பார் எனவும், அங்கு தொடர்பிலிருக்கவும், இந்தியாவுடன் பேசுவேன் எனக் குறிப்பிட்டார்.

பின்னர் வந்த தகவல்களின் படி, ஜனாதிபதி 20 மார்ச் 200 இல் அனுப்பிய கடிதத்தின்படி, 26 மார்ச் 2009, மாலை 6.30 மணிக்கு தன்னை அலரிமாளிகையில், நாட்டில் இருக்கும் தற்போதைய, அரசியல் சூழல்கள் பற்றி பேசுவதற்கு கேட்டிருந்தார் எனவும் தெரிந்தது.

ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு கூட்டமைப்பினர் இணங்கவில்லை. அது நடக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், ரெலோ தலைவர் என். சிறிகாந்தா, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரின் பெயரில் தாங்கள் ஏன் 26ஆம் திகதி சந்திப்பில் பங்குபற்ற முடியாது எனப் பதில் தெரிவிக்கப்பட்டது.

**309. என்ன காரணங்கள் சொல்லியிருந்தார்கள்?**

அது மூன்று பக்கங்கள் கொண்ட கடிதம். சுருக்கமாக முக்கியமானவற்றைத் தருகிறேன்.

அதில் அவர்கள் முதல் கேட்ட விடயம் "நீங்கள் தற்சமயம் அரசியல் பற்றிப் பேசக் கூப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் அதில் எதுவும், எந்த விடயம் என்று பிரத்தியேகமாகக் குறிப்பிடப் படவில்லை.

தற்சமயம் முல்லைத்தீவுப் பகுதிகளில் பொது மக்களுக்கு 300,000 இற்கு மேலானவர்களுக்கு நடக்கும் மனிதாபிமானப் பேரழிவுகளை பற்றி எனக் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தனர்.

அடுத்து கூட்டமைப்பினர் குறிப்பிட்டது, "ஸ்ரீலங்காவின் இராணுவத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ அமைப்புகளிடையிலும், பல முனைகளில் நடக்கும் போர் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வெளியேயும், அரசாங்கத்தால் "பாதுகாப்பு வலயங்களாக" அறிவித்த பகுதிகளிலும்தான். ஆனால் இலங்கை இராணுவம் பாதுகாப்பு வலயங்களிலேயே வானத்திலிருந்தும் கனரக தாக்குதல்களாலும் சராசரி தினமும் 50- 50 பொதுமக்களை கொல்வது மட்டுமல்லாமல், பலரை பலத்த காயங்களுக்கு உள்ளாக்கிறார்கள்."

மேலும் இவ்வளவு அவலங்களிலிருந்தபோதும் அரசாங்கம் அங்கு பணியாற்றிய சர்வதேச பணி நிறுவனங்களையும் அங்கிருந்து வெளியேற்றி, அந்தப் பகுதிக்கான உணவு, மருந்து போன்ற வாழ்வாதாரத் தேவைகளை மட்டுப்படுத்தியுள்ளது. சுதந்திரமாக இயங்கும் பத்திரிகை நிருபர்கள் இவ்விடத்துக்கு செல்வது தடுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகளும் இயங்க முடியாதிருக்கின்றன, பல வருத்தங்கள், நோய்கள் மக்கள் சிறிய பகுதிக்குள் முடக்கப்பட்டுள்ளமையால் எழுந்துள்ளன. 300,000 மேலான மக்கள் இருந்தாலும் 70, 000 மக்களே இருக்கிறார்கள் என்ற கணிப்பில் உணவு, மருந்து போன்றவை அனுப்பப்படுகின்றன. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. இந்த வருடத் தொடக்கத்திலிருந்து 3,000 இற்கு மேலான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கு நடந்த அவலங்களை, விவரித்து தமிழ்த்




தேசியக் கூட்டமைப்பு இந்த மனித அவலங்களை வெளிப்படுத்தியுள்ளதாகவும், அரசாங்கம் தேவையான நடவடிக்கைகள் எடுத்துத் தமிழ்மக்கள் பாதிக்கப் படுவதை நிறுத்துமாறு கேட்பதாகவும் அதில் இருந்தது.

அது போலவே சர்வதேச சமூகத்தையும் கோரினோம். இதுவரை அவை பற்றி எதுவித அக்கறையும் எடுக்கப்படவில்லை. உணவும், மருந்து வகைகளும் இந்த மக்களுக்கு அனுப்பப்படாதமை, இந்த அழுத்தங்கள் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்படுகின்றன என்று நாம் கருதுகிறோம்.

இப்படியே தொடர்ந்தால், இந்தப் பகுதியில் இவற்றால் பெரிய மனிதப் பேரழிவுகள் தோன்றும்.

தமிழ் மக்களைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் எமது தலையாய கடமை ஆனதால், இராணுவம் அவர்களைத் தாக்குவது நிறுத்தப்படவேண்டும், தேவையான அளவு உணவு, மருந்து, தண்ணீர் என்பன அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்படவேண்டும். அடுத்து ஐ.நா., செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் அங்கு பணியாற்ற அனுமதிக்கப்படவேண்டும். இவற்றையே சர்வதேச சமுதாயமும் கோரியுள்ளது.





இப்படியான மனிதப் பேரழிவுகள் இடம்பெறும் பின்னணியிலேயே, உங்களது அழைப்பு எங்களுக்கு வந்திருக்கிறது. தமிழ்மக்களும் நாங்களும் இந்த மனித அவலங்கள் மிக அவசரமாக முதலில் நிறுத்தப்பட்டு, அவை பேரழிவாக மாறுமுன் களையப்பட்டு, அதன் பின்னரே அரசியல் பற்றிப் பேசுவதே நோக்கமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் எனக் கருதுகிறோம்.

கடைசியாக இதுவரை காலமும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை வடக்கு, கிழக்கு சம்பந்தப்பட்ட அரசியல் சமாச்சாரங்களிலிருந்து ஒதுக்கி வைப்பதான கொள்கை யையே கடைப்பிடித்தீர்கள். நீங்கள் இப்பொழுது எங்களோடு பேச விரும்புகிறீர்கள். அதுவும் இவ்வளவு, காலங்கள் கடந்து, நாங்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதை உணர்ந்து பேசக் கேட்கிறீர்கள், அதற்காக, நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைத்து நிற்கக் கூடியதாக ஓர் அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க ஆதரவு தருவோம்.

அதற்காக முதலில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுங்கள்"

– என்ற அந்தக் கடிதம் ஜனாதிபதி மஹிந்தாவிற்கு 25 மார்ச் 2009 அனுப்பப்பட்டது.



(வளரும்.......)

# உலகின் அதிவேக மனிதர்

# உசேன் போல்ட்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

## இன்று உசேன் போல்ட்டின் 35ஆவது பிறந்தநாள் சிறப்பு கட்டுரை



இந்தவாரம் இவர்

உலகின் அதிவேக மனிதர்' என்று அழைக்கப்படும் உசேன் போல்ட் 1986 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஜமைக்காவில் பிறந்த உலகம் வியந்து பார்க்கும் உச்சபட்ச சாதனைகள் பலவற்றை படைத்தவர். இந்த மின்னல் வேக ஓட்டக்காரர் பத்து வினாடிக்குள் 100 மீற்றர் பந்தயத் தூரத்தைக் கடந்த மின்னல் மனிதர்.

ஒலிம்பிக்கில் ஒரு பதக்கம் வெல்வதே பலருக்கும் எட்டாக்கனியாக இருக்க, இவரோ எட்டு தங்கப் பதக்கங்களை வென்றிருக்கிறார். 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் தங்கத்தை தட்டிச் சென்ற ஒரே வீரரும் இவர்தான்.

ஜமைக்காவிலிருந்து குறுகிய தூர ஓட்டப்பந்தய வீரர்கள் தாங்கள் பங்கேற்கும் எந்தவொரு போட்டியிலும் வெற்றிபெற வாய்ப்புகள் அதிகம். இந்த இயங்கும் துறைகளில் மிகவும் பிரபலமான விளையாட்டு வீரர் - உசேன் செயின்ட் லியோ போல்ட்.

கரீபியனில் அமைந்துள்ள இந்த சிறிய தீவு தேசத்தைஉலகளவில் பிரபலம் அடையச் செய்த




ஒரே மனிதர் இவர்தான் .

ஒகஸ்ட் 20 ஆம் திகதி, 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் ஒலிம்பிக் தங்கம் வென்றார், பிரபல அமெரிக்கர் மைக்கேல் ஜான்சனின் உலக சாதனையை முறியடித்தார்.

ஒகஸ்ட் 22 அன்று ஒரு ஓட்டப் பந்தயம் நடந்தது, இது போல்ட்டின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் ஜமைக்கா அணியும் ஒரு புதிய உலக சாதனையுடன் வென்றது. பெய்ஜிங் ஒலிம்பிக்கில் இந்த இரண்டு தங்க விருதுகளைத் தவிர, அற்புதமான ஓட்டப்பந்தய வீரரும் 100 மீற்றர் தூரத்தில் தங்கம் வென்றது மட்டுமல்ல உலக சாதனையுடன் வென்றார்.

உசைன் போல்டின் முழுப் பெயர் உசைன் செயிண்ட் லியோ போல்ட். ஜமைக்கா நாட்டில் உள்ள ஷெர்வுட் கான்டென்ட் என்ற நகரத்தில் வெல்லெஸ்லி மற்றும் ஜெனிஃபர் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் போல்ட். ஆரம்பத்தில் இருந்தே கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டிய உசைன் போல்ட் தனது பள்ளியில் ஓட்டப்பந்தயத்தில் பல பதக்கங்களை வென்றுள்ளார். அவருடைய 15 ஆவது வயதில் தடகளப் போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார்.

ஜமைக்கா நாட்டின் சார்பில், 2001 கரீஃப்டா விளையாட்டுகளில் முதல் முறையாக விளையாடி 400 மீற்றர் ஓட்டத்தில் 48.28 நொடியிலும், 200 மீற்றர் பந்தயத்தில் 21.81 நொடியிலும் ஓடி வெள்ளிப்பதக்கம் வென்றார். அதே ஆண்டு ஹங்கேரியில் நடைபெற்ற உலக இளையோர் தடகளப் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறவில்லை என்றாலும் 21.73 நொடி என்ற அதிவேகத்தை நிகழ்த்தி எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தார்.

அவருடைய சொந்த ஊரான கிங்ஸ்டனில் நடைபெற்ற 2002 ஆம் ஆண்டுக்கான உலக இளையோர் தடகளப் போட்டியில் 200 மீற்றர் ஓட்டத்தை அவருடைய முந்தய வேகத்தை விட இன்னும் வேகமாக ஓடி 20.61 நொடியில் கடந்து வெற்றி பெற்றார். இளையோருக்கான தடகளப் போட்டியில் தங்கம் வென்ற இளம் வீரர்களுள், போல்ட் நிகழ்த்தியது தான் மிக இள வயது வெற்றி.

2003ஆம் ஆண்டு நடைபெற்ற கரிஃப்டா மற்றும் உலக இளையோர் தடகளப் போட்டிகளிலும் தங்கம்வென்றார். 2008 ஆம் ஆண்டில் நியூயோர்க்கில் ஐகேன் விளையாட்டரங்கில் நடைபெற்ற ரீபாக் கிராண்ட் ப்ரீ லீக்கில், 100 மீற்றர் ஓட்டத்தில் அவருடைய சக போட்டியாளர் அஸாஃபா பவலின் 9.74 வினாடிகள் என்ற சாதனையை முறியடித்து, வெறும் 9.72 நொடியில் ஓடி புதிய உலக சாதனை படைத்தார் போல்ட்.

இவ்வளவு சாதனைகள் இருந்த போதும் அவரது பெருமை உலகம் முழுவதும் பரவவில்லை. அந்த பெருமையை அவருக்கு தந்தது 2008 ஆம் ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டி. ஒலிம்பிக்கில் 100 மீற்றர் பந்தயத்தின் இறுதிப்போட்டியில் 9.69 நொடியில் ஓடி, அவருடைய முந்தய சாதனையையும் முறியடித்து அகில உலக சாதனை படைத்தார். அதே போல, 200 மீற்றர் பந்தயத்திலும், அமெரிக்க வீரர் மைக்கேல் ஜான்சனின் 12 ஆண்டு சாதனையாக இருந்த 19.32 வினாடிகள் என்பதை முறியடித்து, 19.30 நொடியில் ஓடி, புதிய உலக சாதனை படைத்தார். அடுத்து நடைபெற்ற 4 X 100 தொடர் ஓட்டப் பந்தயத்திலும் ஜமைக்கா அணியில் மூன்றாம் பகுதியை போல்ட் ஓடி, மூன்றாவது தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். ஆனால், இந்தத் தொடரில் அவருடைய சக வீரர் நெஸ்டா கார்ட்டர் ஊக்கமருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டதால் அந்தத் தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது. எனினும் உசைன் நிகழ்த்திய சாதனை மட்டும் உலகம் புகழும் பெயரானது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டியில், 100 மீற்றர் ஓட்டத்தில் 9.58 நொடியில் ஓடி, அவரது சாதனையை மீண்டும் முறியடித்து உலக சாதனை படைத்தார். அதே போல 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பந்தயத்தூரத்தை 19.19 நொடியில் கடந்து மீண்டும் உலக சாதனை படைத்தார்.

அதேபோல் 2012 ஆம் ஆண்டு லண்டனில்




நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 X 100 தொடர் ஓட்டத்தில் வரிசையாக மூன்று தங்கம் வென்று அசத்தினார்.

2013ஆம் ஆண்டு நடைபெற்ற கோல்டன் காலா மற்றும் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 X 100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்று உலக தடகளப் போட்டிகளில் உச்சங்களை தொட்டார். இதன் மூலம் உலக தடகள சம்பியன்ஷிப் பந்தயங்களின் 30 ஆண்டு வரலாற்றின் அதிக வெற்றிகளை பெற்ற தலை சிறந்த வீரர்களுள் ஒருவர் என்ற பெருமையை பெற்றார் போல்ட்.

2015ஆம் ஆண்டு பெய்ஜிங் உலகப் போட்டிகளில், மீண்டும் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 X 100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்று வெற்றியின் நாயகனாக வலம் வந்தார்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் போட்டியிலும் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 X 100 தொடர் ஓட்டத்தில் வழக்கம் போலவே மூன்று தங்கம் வென்று அசைக்க முடியாத சாதனைகளைப் படைத்தார். இதன் மூலம் மூன்று ஒலிம்பிக்கில் தொடர்ந்து தங்கம் வென்ற 'தங்கமகன்' என்ற பெருமையை அடைந்தார். தனது ரசிகர்களின் எதிர்பார்ப்பை இந்த முறையும் உண்மையாக்கினார்.

பங்கிற்ற ஒவ்வொரு போட்டியிலும் தன்னை தானே வென்று புதிய புதிய வரலாறுகளை படைத்த அவரது அதிவேகம் தான், மின்னல் வேக போல்ட் **(Lightining Bolt)** என்ற பெயரை இவருக்கு பெற்றுத் தந்தது.

அதிலும் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 10 மீற்றர் தூரத்தை வெறும் 0.81 வினாடிகளில் கடந்து அசத்தியுள்ளார் உசைன் போல்ட்.

இவரின் சாதனைகளை கௌரவிக்கும் விதத்தில் IAAF, ஒவ்வொரு வருடமும் வழங்கும் சிறந்த உலக விளையாட்டு வீரர் பட்டத்தை 2008, 2009, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் பெற்றார். மேலும் பல விருதுகளை வென்றுள்ள உசைன் போல்ட் சாதனைகளின் பிறப்பிடமாக உள்ளார் .

கடந்த 2017 ஆம் ஆண்டு தடகளப் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த போல்ட் பல நாள் கனவாக இருந்த ஆசையை நிறைவேற்ற சிறிது காலம் கால்பந்து விளையாட்டில் கவனம் செலுத்தினார். அதன் பிறகு அண்மையில் தன் விளையாட்டு வாழ்க்கை முடிவுக்கு வந்து விட்டது என்றும், இனி வியாபாரத் துறையில் முழு கவனம் செலுத்தவுள்ளதாகவும் போல்ட் அறிவித்தார். இன்று அவரது பிறந்த நாளை முன்னிட்டு இந்த கட்டுரை பிரசுரமாகிறது .

# வீதியில் வீழ்ந்து மரணித்துகிடந்தவர் திடீரென உயிர் பிழைத்த அதிசயம்!

குருநாகல் பிரதேசத்தில் திடீரென வீதியில் விழுந்த நிலையில் இளைஞன் கொவிட் தொற்றால் மரணமடைந்துள்ளார் என எண்ணி குருநாகல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னர் திடீரென உயிர் பிழைத்து வைத்தியசாலையில் இருந்து அவர் தப்பிச் சென்றுள்ளார்.

குருநாகல், யத்தம்பாலவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடை இளைஞன் ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

அதிக போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்த இந்த இளைஞன் குருநாகல் வில்கொட வீதியில் மரத்திற்கு கீழ் விழுந்து கிடந்தமையைப் பிரதேச மக்கள் அவதானித்துள்ளனர்.

குறித்த இளைஞனுக்கு அருகில் செல்லும் போது உயிரிழந்தவர்கள் மீது காணப்படுவது போது ஈக்கள் மக்கள் எறும்புகள் அவர் முகத்தில் நிறைந்து காணப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய நிலைமையில் இந்த நபர் கொவிட் தொற்றால் உயிரிழந்து கிடக்கிறார் என பிரதேச மக்கள் நம் பியுள்ளனர். கொவிட் அச்சம் காரணமாக அவரை நெருங்க முயற்சிக்காத மக்கள் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

உடனடியாக அம்புலன்ஸ் ஊடாக குருநாகல் வைத்தியசாலைக்கு அவர் அனுப்பப்பட்டுள்ளார். வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சில நிமிடங்களில் அவருக்கு சுயநினைவு வந்துள்ளது. பின்னர் அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

# கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 284 பேர் சிக்கினார்கள்

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 284 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளில் இருந்து இதுவரை அந்தச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 55 ஆயிரத்து 656 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# திருமண விழாவில் பங்கேற்றவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை

யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள வீடொன்றில் நடைபெற்ற திருமண விழாவில் பங்கேற்றவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாட்டில் உருவாகியுள்ள கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக திருமணங்கள் உள்ளிட்ட விழாக்கள் நடைபெறுவதற்குக் கடந்த 17ஆம் திகதி முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் குறித்த வீட்டில் அளவுக்கதிகமானவர்கள் ஒன்றுகூடி திருமண நிகழ்வில் பங்கேற்றுள்ளனர். இதையடுத்து குறித்த திருமண விழாவில் பங்கேற்றவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அண்மையில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் பூப்புனித நீராட்டு விழா நிகழ்வில் பங்கேற்ற சிலருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டில் 64 பேர் உட்பட வடக்கில் நேற்று 114 பேருக்குக் கொரோனா!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

வடக்கு மாகாணத்தில் நேற்று 114 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 687 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 64 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 23 பேருக்கும், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 16 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் 02 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒருவரும், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும், பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## ஊரடங்கு காலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் நேற்று ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது: –

இன்று (நேற்று) இரவு 10 மணி முதல் இம்மாதம் 30ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை, நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத் தப்பட்டுள்ளது.

இந்த ஊரடங்கானது, இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்படாத 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கு வதை இலக்காகக் கொண்டது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்படி செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர், அவர்கள் அனைவருக் கும் தடுப்பூசியை வழங்கி முடிக்குமாறு, இன்று (நேற்று) நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கிராமிய கொரோனா ஒழிப்புக் குழுக்கள் மூலம் இந்த நபர்களை அடையாளம் கண்டு தடுப்பூசி ஏற்ற, எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் சுகாதாரப் பிரிவுக்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

மேலும், 1906 என்ற அவசர இலக்கத்துக்கு அல்லது தேசிய கொரோனா ஒழிப்பு மையத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்யும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசித் திட்டத்தை, எனது மேற்பார்வையின் கீழ், சுகாதாரத்துறையின் அறிவுறுத்தல்படி மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலத்தில், விவசாயம், ஆடை மற்றும் நிர்மாணத் தொழில்கள், ஏற்றுமதித் தொழில்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள், விமான நிலையங்கள் மற்றும் விமான நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகப் பேணவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்த ரவை மீறுபவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டத்தை அமுல்படுத்துமாறும், ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார் – என்றார்.

# குடாநாட்டில் மேலும் ஐவரை காவுகொண்டது கொரோனா

யாழ்ப்பாணத்தில் மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மானிப்பாய் சுதுமலை வடக்கைச் சேர்ந்த 92 வயதுடைய ஆண் ஒருவரும், கைதடியைச் சேர்ந்த 43 வயதுடைய ஆண் ஒருவரும், மானிப்பாயைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 86 வயதுடைய ஆண் ஒருவரும், அளவெட்டியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவருமே வியாழன் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 192ஆக உயர்வடைந்துள்ளது.

# மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்தே முடக்கப்படுகின்றது நாடு

## ஜனாதிபதி தெரிவித்தார் என்கிறார் சன்ன ஜயசுமன



நாட்டை முடக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தினார். அந்த வேண்டுகோளுக்கு மதிப்பளித்தே 10 நாள்களுக்கு நாட்டை முடக்கும் தீர்மானத்துக்கு ஜனாதிபதி வந்தார்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பகல் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி நேற்று இரவு உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

நாட்டை முடக்கினாலும் அத்தியாவசிய சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படும் – என்றார்.

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு நாட்டை ஒரு வாரத்துக்காவது முடக்க நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்களால் நேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழில் மக்கள் முண்டியடிப்பு



(இ.கலையமுதன்)

நாடு முடக்கப்படவுள்ளது என அறிவிப்பு வெளியாகியுள்ள நிலை யில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் தொடக்கம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வரை மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததை அவதானிக்ககூடியதாக இருந்தது.

நேற்று பிற்பகல் முடக்கம் குறித்த அறிவிப்பு வெளியான பின்னர் நூற்றுக்கணக்கான மக்கள் ஒவ்வொரு எரிபொருள் நிலையத்திலும் திரண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை, வர்த்தக நிலையங்களிலும் மக்கள் அலை மோதினர்.

# வவுனியாவில் மூன்று பெண்கள் கொரோனாத் தொற்றால் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மாத்திரம் 3 பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத் தில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற் றால் மரணமடைந்துளார்.

அத்துடன் பெரியார் குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக வீட்டில் மரணமடைந்த பெண்ணுக்கு முன்னெடுக்கப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சுகவீ னம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத்தொற்றுள்ளமைஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றால் நேற்று முன்தினம் மாத்திரம் 3 பெண்கள் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் மயங்கி விழுந்த பெண் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, குருமன்காடு பகுதியில் திடீரென மயங்கி விழுந்த இளம் குடும்பப் பெண் மரணமடைந்துள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பபி பெண் ஒருவர் திடீரென மயங்கிவிழுந்துள்ளார். இதையடுத்து உறவினர்கள் உடனடியாக அப்பெண்ணை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும், குறித்த பெண் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். 35 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உள்ளதா என அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# முன்னாள் நிதி அமைச்சர் மங்களவுக்கு சந்திரிகா அம்மையாரின் பாசமிகு கடிதம்



கொழும்பு, ஓக. 21

'அன்புள்ள மங்கள, நம் நாட்டில் தற்போது அதிகளவிலான மக்களை பாதிக்கும் கொரோனா நோயால் நீங்களும் அவதியுறுகின்றமை மிக வேதனையானது' என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இதுதொடர்பில் தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டு தனது வருத்தங்களைத் தெரிவித்துள்ளார்.

நீங்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை தொடர்பாக நான் மிகுந்த வேதனை அடைகின்றேன். தற்போது நீங்கள் நாளுக்கு நாள் குணமடைந்து வருவதைக் கேட்டு நான் நிம்மதியாக இருக்கின்றேன்.

நீங்கள் மிகவும் விசுவாசமான, கொள்கை ரீதியான அரசியல் நண்பராகவும், பேரழிவின் போது கைவிடாத நல்ல நண்பராகவும் இருக்கிறீர்கள்.

எங்கள் அன்புக்குரிய மக்களுக்கான சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப நீங்கள் விரைவில் குணமடைந்து வருவீர்கள் என நான் நம்புகின்றேன் என அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸாரின் தடுப்புக் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலம் கொழும்புக்கு மாற்றம்

மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்த விதுசன் என்ற இளைஞன் திடீரென உயிரிழந்த நிலையில் மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிபதி ஏ.சி. ரிஷ்வான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்போது, புதைக்கப்பட்ட விதுசனின் சடலத்தை மீண்டும் 21ஆம் திகதி திங்கட்கிழமை தோண்டி எடுத்து இலங்கையிலேயே இத்துறையில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முன்னிலையில் மீளவும் பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்த வகையில், தோண்டி எடுக்கப்பட்ட விதுசனின் சடலம் அநுராதபுரத்திற்கு எடுத்து செல்லப்பட்டு மீண்டும் உடல் கூற்று பரிசோதனைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவருடைய தந்தை தெரிவித்துள்ளார். இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி சந்திரன் விதுசன் எனும் இளைஞன் ஐஸ்போதைப் பொருள் வியாபாரம் செய்கிறார் என பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுமார் இரவு 10.45 மணியளவில் கைதுசெய்யப்பட்ட நிலையில் மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் எழுமாறாக அன்டிஜன் பரிசோதனை



வவுனியா வடக்கு புளியங்குளம் சமுர்த்தி வங்கியில் நேற்றைய தினம் 12 பேருக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்கு கொவிட் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பிரதேச செயலாளர் மற்றும் சிலருக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் பிரதேச செயலாளர் உட்பட மூவருக்கு கொவிட் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், கடந்த வியாழக்கிழமையும் பிரதேச செயலகத்தில் பணியாளர்களுக்கு மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்குத் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் குறித்த பிரதேச செயலகத்தில் பணிபுரியும் ஏனைய ஊழியர்களுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் எவருக்கும் கொவிட் தொற்றுறுதி செய்யப்படவில்லை.

வவுனியா நகர் இரண்டாம் குறுக்கு தெருவில் எழுமாறாக நேற்று 75 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை புளியங்குளம் கல்மடு கிராமத்தில் 35 குடும்பங்கள் உள்ளனர். அதில் 19 குடும்பங்களில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை அடுத்துக் குறித்த கிராமம் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருப்பவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியாவில் அண்மைய நாள்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தபால் மூலம் விடைகளை அனுப்ப முடியாதவர்கள் kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்ப முடியும்.**



09

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

| | |
|---|---|
| முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - | ரூபா 7,000.00 |
| இரண்டாம் இடம் - | ரூபா 5,000.00 |
| மூன்றாம் இடம் - | ரூபா 3,000.00 |

**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. அழித்தலைக் குறிக்கும் திருவிழா எது?**

.........................................................................

**2. ஒட்டுசுட்டான் தான்றோன்றீஸ்வரர் ஆலய மூர்த்தியின் பெயர் என்ன?**

.........................................................................

**3. பாபநாசத்தைத் தீர்த்தமாகக் கொண்ட திருத்தலம் எது?**

.........................................................................

**4. நல்லூர் கந்தசுவாமி கோவிலில் ஆறுமுகப்பெருமான் திருவீதியுலா வருகின்ற சந்தர்ப்பங்கள் எவை?**

.........................................................................

**5. ஆடி அமாவாசையன்று தீர்த்தம் இடம்பெறும் கிழக்கிலங்கையின் கீர்த்தி மிக்க பிள்ளையார் கோவில் எது?**

.........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

09

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ---------------------------------------------------
2. பிறந்த திகதி : ---------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ---------------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------------------
5. முகவரி : ------------------------------------------------------

..........................................
கையொப்பம்

# கொரோனா விடயத்தில் அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

## இம்ரான் எம்.பி. காட்டம்



கொவிட் தொற்றிலிருந்து அரசு மக்களைப் பாதுகாக்கும் என்ற விடயத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். இதனால் தாமே சில முடிவுகளை எடுத்து வருகின்றனர் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

கொவிட் நாடு முழுவதும் வேகமாகப் பரவி வருகின்றது. நாளாந்தம் தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கையும், மரணமடைவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

வைத்தியசாலைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்கள் வைத்திய வசதிக்காக அல்லல்படுகின்றனர். இதனைக் கவனத்தில் கொண்டு வைத்தியர்களும் ஏனைய சுகாதாரப் பகுதியினரும் சில நாள்களுக்காவது நாட்டை முடக்க வேண்டும்.

அதன் மூலம் கொவிட் தொற்றையும், கொவிட் மரணங்களையும் குறைக்க முடியும் என்று அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேபோல அரசியல் தலைவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனினும் இவற்றை அரசு காதில் போட்டுக்கொள்ளவில்லை. கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. அதற்கான திட்டங்களும் அரசிடம் இல்லை.

இதுவே கொவிட் தொற்று அதிகரிப்புக்கும், கொவிட் மரண அதிகரிப்புக்கும் காரணமாகும். எனவே இந்த அரசு மக்களைப் பாதுகாக்கும் விடயத்தில் மிகவும் பலவீனமாக உள்ளது என்பதை உணர்ந்த மக்கள் அரசில் நம்பிக்கை இழந்து விட்டனர்.

இதனால் ஆங்காங்கே பிரதேச ரீதியாக மக்கள் ஒன்றிணைந்து தத்தமது பகுதிகளில் சுய முடக்கத்தை பிரகடனப்படுத்தி வருகின்றனர். இதேபோல பல்வேறு தொழிற்சங்கங்களும் நாடு தழுவிய முடக்கத்தை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றன.

அரசு செய்ய வேண்டிய விடயத்தை இன்று மக்கள் செய்யுமளவுக்கு இந்த அரசாங்கம் மிகவும் பலவீனப்பட்டு விட்டது. நாட்டை நிர்வகிக்கும் இந்த அரசியல் தலைமைகளின் குடும்பத்தில் யாரும் கொவிட் தொற்றில் பாதிக்கப்படவில்லை. மரணமடையவில்லை.

இதனால் அவர்களுக்கு கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட மற்றும் மரணமடைந்த குடும்பங்களின் துயரங்களை உணர்ந்து கொள்ள முடியவில்லை. இதுவே இன்றைய பிரதான பிரச்சினைக்கு காரணமாகும். அரசாங்கத்தின் இந்த அசமந்த நிலை தொடர்பாக நான் மிகவும் கவலையடைகின்றேன். உங்களை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று மக்களைக் கைவிட்ட அரசாங்கமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. எனவே பொதுமக்கள் இந்த அரசாங்கத்தை நம்பியிராது தங்களைத் தாமே பாதுகாத்துக்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# நாயைக் காப்பாற்ற முற்பட்டவர் சாவு

தெல்கொட, மீகஹவத்தை பிரதேசத்தில் கிணற்றில் விழுந்திருந்த நாய் ஒன்றை காப்பாற்ற முற்பட்ட நபர் ஒருவர் குறித்த கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

44 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நாய் கிணற்றில் விழுந்ததை அறிந்த நபர் நேற்றுமுன்தினம் மாலை 6 மணி அளவில் கயிறு ஒன் றின் உதவியுடன் கிணற்றுக்குள் இறங்கியுள் ளார். பின்னர் நாயுடன் மேலே வந்துகொண் டிருந்த போது கயிறு அறுந்ததில் குறித்த நபர் சுமார் 30 அடி ஆழமான கிணற்றில் விழுந்துள்ளார்.

உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் அந்த நபரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்த போதும் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு முன்பே அவர் உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், நாய் காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொவிட் சிகிச்சைக்கு புதியமுறை அறிமுகம்

மேல் மாகாணத்தில் அறிகுறிகளின் தீவிரத்துக்கு ஏற்ப கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் புதிய முறை நிறுவப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 தொற்றுநோய் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

புதிய சிகிச்சை முறை நோயாளிகளை கொவிட் சிகிச்சை மையங்களுக்கு மாற்றவோ அல்லது வீட்டிலேயே பராமரிக்கவோ பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளிகள் உரிய தகவல்களுடன் 1904 என்ற சிறப்பு இலக்கத்துக்கு குறுஞ்செய்திகளை அனுப்ப வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, நோயாளிக்கு மூச்சுத் திணறல் உள்ளதா, நோயாளி அறிகுறியற்றவராக இருந்தால் விவரங்கள். நோயாளியின் வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவை அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

பெறப்பட்ட விவரங்கள் சம்பந்தப்பட்ட கொவிட் சிகிச்சை மையத்திற்கு அனுப்பப்படும் மருத்துவர்கள் குழுவுக்கு கொவிட் - 19 தொற்றுநோய் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தால் சமர்ப்பிக்கப்படும்.

மருத்துவர்கள் நோயாளியின் நிலைகளை வகைப்படுத்தி, அவர்கள் பெற்ற விவரங்களை சரிபார்க்க 247 என்ற சிறப்பு இலக்கம் மூலம் தொடர்புகொள்வார்கள், அதன் பிறகு அந்த நோயாளிகள் கொவிட் - 19 சிகிச்சை மையங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

அம்புலன்ஸ் சேவைகள் மற்றும் பிற சிகிச்சை வசதிகள் வழங்கப்படும். வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட வேண்டிய நோயாளிகள், தேவையான சேவைகளை வழங்கும் வைத்தியர்கள் குழுவால் தொடர்ந்து தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

இந்தச் சேவைக்கு ஒரு சிறப்பு எண் 1390 ஒதுக்கப்பட்டுள்ளது, அதன் மூலம் மட்டுமே சேவை வழங்கப்படும்.

# இரகசியமாக திறக்கப்பட்ட அலுவலகம் ஜெனிவாவை திருப்திப்படுத்தும் நாடகமே!



## லீலாதேவி தெரிவிப்பு

கிளிநொச்சியில் கடந்த 12 ஆம் திகதி மிகவும் இரகசியமாகத் திறக்கப்பட்ட காணாமற்போனோருக்கான அலுவலகம் எதிர்வரும் ஜெனிவாவை எதிர்கொள்வதற்கான ஒரு நாடகமே என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பின் செயலாளர் ஆ. லீலாதேவி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை நாம் தொடர்ச்சியாக எதிர்த்தே வந்துள்ளோம், இதனால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு எவ்வித நீதியும் கிடைக்கப்போவதில்லை. இதனை நாங்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம்.

சர்வதேசம் ஓ.எம்.பி. மீது மெல்லிய நம்பிக்கை வைத்திருந்தது. எனவே நாம் ஓ.எம்.பியின் உண்மை முகத்தை வெளிக்காட்டுவதற்காக 2019.07.20 அன்று பலத்த ஆதாரங்கள் உள்ள ஐந்து அம்சங்களை ஓ.எம்.பி. அலுவலகத்துக்கு வழங்கினோம்.

இதனை அப்போது தலைவராக இருந்த சாலிய பீரிஸ்ம் ஏற்றுக்கொண்டு தீர்வைத் தருவகிறேன் எனக் கூறியிருந்தார். ஆனால் இன்று வரை அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கப்படவில்லை. இதன் மூலம் இந்த ஓ.எம்.பி. அலுவலகத்தால் எதுவும் ஆகப்போவதில்லை என்ற உண்மை அனைவருக்கும் தெரியவந்தது.

இந்த நிலையில் தற்போது கொவிட் பரவல் காரணமாக ஒன்று கூடவோ, எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தவோ, முடியாதவாறு சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் விதித்துவிட்டு இரகசியமாகக் கிளிநொச்சியில் ஓ.எம்.பி. அலுவலகத்தைத் திறந்து செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பது எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

யாருக்காக இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டதோ அவர்கள் எவருக்கும் தெரியாது இதனைக் கிளிநொச்சியில் இரகசியமாக மேற்கொண்டமைக்கான காரணம் என்ன? எனக் கேள்வி எழுப்பிய அவர் சர்வதேசத்தையும், ஜெனிவாவையும் எதிர்கொள்வதற்காக அரசு போடும் நாடகமே இது என்றும் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பாகிய நாம் எட்டு மாவட்டங்களின் உறவினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள்.

எனவே நாம் கிளிநொச்சியில் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்ட ஓ.எம்.பி. அலுவலகத்தை எதிர்க்கின்றோம். இச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்களிடம் வினவிய போது -

காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் தலைமைக் காரியாலயம் மாவட்ட செயலகத்திடம் தங்களுடைய அலுவலகத்தின் செயற்பாடுகளைக் கிளிநொச்சியில் ஆரம்பிப்பதற்கு இடம் ஒன்றைக் கோரியிருந்தார்கள். அதற்கமைவாக மேற்படி இடத்தை நாம் வழங்கினோம். அங்கு அவர்கள் தங்களுடைய செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்கள் மத்தியில் தீவிரமாக பரவும் கொவிட்

சிறுவர்கள் மத்தியில் கொவிட் தொற்றுப் பரவல் மேலும் அதிகரித்துள்ளது என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜே.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றுக் காரணமாக நாளாந்தம் சுமார் 25 சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டாலும் கூட, தமது குழந்தைகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.


இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2021 இல் வெளியிடப்பெற்றது.